# சங்கமயுகம்

மலர் 24: பிப்ரவரி-மார்ச் 2011 இதழ்: 6

இருமாத இதழ்: ரூ. 7.00



**தலையங்கம்**

## சிவராத்திரி - அனைவருக்குமான ஒரு மகத்தான பண்டிகை

சிவராத்திரி என்று சொன்னால், இது சைவ சித்தாந்த சம்பிரதாயத்தில் நம்பிக்கையுள்ள ஒரு சாரார் கொண்டாடும் பண்டிகை என்பதுதான் இன்றைய நிலை. உண்மையில் இப்பண்டிகை வெவ்வேறு கலாச்சாரமுடைய அனைத்து மக்களுக்கும் பொதுவானது என்ற யதார்த்தமான உண்மை நடைமுறையில் இன்று வரையிலும் கூட ஏற்கப்படவில்லை. காரணம் என்ன? இதற்கு, உலக நாடக வரலாறு பற்றி அறிவது அவசியம். மனித இனம் ஒன்று தான். ஆனால் எல்லோரும் அணிந்திருக்கும் வேடம், ஒரே மாதிரியானதல்ல. நாடகம் என்பதால் கதா பாத்திரங்களின் காலமும், காட்சிகளும் கூட நாடகத்திற்கேற்ப மாறுபட்டவையாக அமைந்திருக்கிறது போலும். இந்த உலக நாடக அரங்கில் நாம் தான் நடிகர்கள், நாம்தான் நடித்துக்கொண்டிருக்கிறோம் என்றாலும், அடுத்து நடக்கவிருக்கும் நிகழ்வு பற்றித் தெரிகின்ற வாய்ப்பு நமக்குட்பட்டதாக இல்லை. இவ்வாறு வினாடிக்கு வினாடி எப்படி நடக்க வேண்டுமோ, அப்படியே நடக்கும் இந்த உலக நாடகத்தில், நடந்து முடிந்த பின்னரே என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது. ஆகவேதான் இந்தப் படைப்பு அறிவதற்கரிய இரகசியங்களை உள்ளடக்கிய ஒன்றாக இருக்கிறது எனக்கூறுகின்றோம். இவ்வளவு ஆழமான உண்மைகள் அடங்கிய நாடகத்தின் காரண கர்த்தா யார் ? இதற்கான பதில் இது உலகளாவிய திட்டம். அதாவது மிக மிகத் துல்லியமாக நிச்சயிக்கப்பட்டிருக்கும் யுனிவர்ஸல் பிளான் என்பதாக இருக்கிறது. அதாவது ஒட்டுமொத்த பிரபஞ்ச அளவிலான காரண காரியங்களை உள்ளடக்கிய ஆக்கபூர்வமான திட்டமாக இருக்ககூடும். எனினும் நாம் தெரிந்து கொண்ட நமக்கு

**சங்கமயுகம்**

**பொருளடக்கம்**


**மலர்: 24 பிப்ரவரி - மார்ச் 11 இதழ்: 6**


| | |
|---|---|
| 1. தலையங்கம் | 01 |
| 2. பகவான் வாக்கு | 06 |
| 3. அனுபவ கட்டுரை (சகோ.நிர்வயர்ஜி) | 07 |
| 4. எப்படி, எப்படி, எப்படி........ | 12 |
| 5. நியமங்களும் மரியாதையும் | 19 |
| 7. கனவு நனவாகியது | 23 |
| 8. மாணவர் பகுதி | 25 |
| 9. கேள்வி பதில் | 28 |
| 10. சேவை செய்தி | 32 |


***இந்த இதழில் வெளியாகும் ஆன்மீகக் கருத்துக்கள் கலியுகத்தின் இறுதியான இன்றைய புருே ாத்தம சங்கமயுகத்தில் அனைவருக்கும் ஆன்மீகத் தந்தையாக விளங்குகின்ற பரமபிதா பரமாத்மா, பிரஜாபிதா பிரம்மா மூலமாக இப்பூவுலகில் மீண்டும் தர்மத்தை ஸ்தாபனம் செய்வதற்காக அருளிச் செய்த மகாவாக்கியத்திலிருந்து தொகுத்து வழங்கப்பட்டவையாகும்.***

ஆசிரியர்

**“தூய்மையே சங்கமயுகத்தின் ஆஸ்தி”**



ஆறுதல் அளிக்கக்கூடிய உண்மை ஒன்று உண்டு. அது எல்லாம் வல்ல இறைவன், ஜோதி சொரூபமாக விளங்கும் சிவபரமாத்மாவும் உலக நாடகத்தில் கட்டுப்பட்டவராக இருக்கின்றார். திவ்ய அவதாரத்தின் மூலம் நம்மை நாடி வருகின்றார். ஜீவாத்மாக்களாகிய நம்மோடு உரையாடுகின்றார். மனிதர் எவரும் அறிந்திராத ஆன்மீக ஞானமும், யோகமும் கற்பிக்கின்றார். முக்தி, ஜீவன் முக்தி அளிக்கின்றார் என்பது தான். பகவத் கீதையில் பகவான் வாக்கு. அதர்மம் உச்ச கட்டத்தை அடையும் போதெல்லாம், தர்மம் ஸ்தாபனை செய்வதற் காக அவதரிக்கின்றேன். என்பதன் அடிப்படை யில், உலக நாடகம் சாசுவதமானது என்ற உண்மை புலப்படுகிறது. மேலும் பகவான் உலக நன்மையின் பொருட்டு பாரத தேசத்தில் அவதரித்தார் என்ற உண்மை வரலாறும் இதை உறுதி செய்கின்ற ஞாபகார்த் தங்களும் விசேஷமாக பாரதத்தில் இருப்பதும் இதனை நினைவூட்டும் பிரசித்தமான தீர்த்த ஸ்தலங்கள் பக்தி சிரத்தையுடன் ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டுவரும் சிவராத்திரி பண்டிகை ஆகியன இதை மேலும் உறுதி செய்யும் அத்தாட்சிகளாக விளங்குகின்றன. எல்லோருக்கும் தந்தை இறைவன். தந்தை என்று அவரை ஏற்றுக்கொண்டிருக்கிற மற்ற எல்லோரும் அவருடைய குழந்தைகள். ஆதலால் சகோதர சகோதரர்கள். தந்தை பரமாத்மா. குழந்தைகள் ஆத்மாக்கள். தந்தை வேறு, குழந்தைகள் வேறு. இருவரும் ஒன்றல்ல. சிலர் இறைவன் மனிதனைத் தன்னைப்போலவே படைத்தார் என்பதாக இருக்கின்றது. ( GOD HAS CREATED MAN IN HIS OWN IMAGE ) இதன் பொருள் இறைவன், எல்லோரையும் இறைவனாகவே படைக்க வில்லை. இறைவன் தன்னிடமுள்ள குணங்களைக் கொடுத்தார். ஞானமுள்ளவனாக ஆக்கினார். இறைவன் அளித்த குணங்களை யும், ஞானத்தையும் பயன்படுத்தி எல்லோருமே அல்லது எத்தனைபேர் இறைவனைப் போன்றவர் ஆகியிருக்கிறார்கள்! இல்லை என்பதே பதில். ஆகியிருக்கிறார்கள் என்று சொன்னால், இறைவனைப் போன்று முக்தியும், ஜீவன் முக்தியும் அளிப்பவர்களாக இருக் கின்றார்களா? இல்லை. பகவான் வாக்கு. இறைவன் மனிதனாகப் பிறப்பதில்லை. நாடகத்தில் ஒவ்வொருவருக்கும் அவரவர் பங்குண்டு. நாடகத்தில் இறைவனுக்கும் பங்குண்டு, இறைவன் அவதரிக்கின்றார் என்று கூறப்பட்டுள்ளது. இதைப்பற்றி மனதில் கேள்வி எழுகிறதா? வாருங்கள் தெரிந்து கொள்ளலாம்.

நாடகம் என்று சொன்னால் ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களில் நடந்து முடிந்து விடும் நாடகம் அல்ல. இது உலக நாடகம். 5000 ஆண்டுகாலம் நடக்கும் நாடகம். இதில் நடிக்கும் நடிகர்கள் எங்கிருந்து வருகிறார்கள்? நடிகர்கள் ஆத்மாக்கள். இவர்களின் இருப்பிடம் மேலோகம் எனப்படும் சம்பூரண அமைதி நிலவும் பிரம்ம லோகம். வெவ்வேறு கால கட்டங்களில் அவரவர் கால அட்டவணைப்படி, கீழிறங்கி வந்து, உடலெனும் வேடம் அணிந்து, அவரவர் பாகத்தில் நடிக்கிறார்கள்.

தந்தை என்றும், சகோதரர்கள் என்றும் புரிந்து கொண்ட மனிதன் வெவ்வேறு நம்பிக்கைகள் உடையவர்களாகி விட்டது எப்படி? காரணம் இதுதான். எல்லோரும் ஒரே சமயத்தில் வருவதில்லை. அவரவர் வரும் போது நிலவும் காலச்சூழ்நிலை, தத்துவங்களின் தன்மையில் உண்டாகியிருக் கின்ற மாற்றம், இயற்கையின் வெப்ப தட்பநிலை ஆகியவற்றில் மாற்றம் உண்டாகும்போது மனித மனங்களில் மாற்றம் உண்டாகாமல் இருக்குமா ?

மேலும் ஆத்மாக்கள் அனைத்தும் ஒரே வர்க்கம். ஆனால் ஒன்றுக்கொன்று வேறு பட்டும், விசித்திர மனோபாவமுடைய தாகவும் எளிதில் புரிந்து கொள்ள முடியாத மறை பொருளாக உள்ள தனித்தனி திறன் அடங்கிய

ஒன்றாகவும் இருக்கின்றன. இதன் காரண மாகவே, ஆத்மாக்கள் பூலோக மேடைக்கு முதன் முறையாக வருகின்ற போதே, ஒரு சூழ்நிலையை தனக்கே உரித்தான முறையில் பிரதிபலிப்பதற்கேற்ற சரீரமே அதற்கு ஆதார மாகக் கிடைக்கிறது. இவ்வாறாக, ஒவ்வொரு ஆத்மாவும் விதவிதமான சரீரங்களில் புகுவதும், வளர்ச்சியின் அடிப்படையில், வெவ்வேறு விதமாக பிரதிபலிப்பதும் ஒரு விந்தையே என்றாலும், நமது வாழ்க்கை அனுபவங்கள் இதை உறுதி செய்வதாகவே இருக்கின்றன. இதன் மூலம் ஒவ்வொரு ஆத்மாவும், இன்னொரு ஆத்மா விலிருந்து வேறுபட்ட தன்மை மற்றும் திறனுடையதாக இருக்கின்றது என்பது புலனாகிறது. இதன் காரணமாகவே காலம் செல்லச் செல்ல வெவ்வேறு மதக்கோட்பாடு களை ஆணித் தரமாக நம்புகின்ற மனச்சார்பு டையதாகவும் இருக்கின்றது என்பது விளங்கு கின்றது. இதனடிப்படையில், ஒரே மனச்சார்புடைய அநேக குடும்பங்கள் இணைவது சாத்திய மாகின்றது. இப்படிப்பட்ட ஒரு நிலை நாடகத் தில் உருவாகும்போது, அந்தந்த கால கட்டங் களில் குழப்பத்தை நீக்கி, வழி நடத்துவதற்காக, முறையாக குருமார்கள் இறங்கி வர அவர் காட்டும் வழியினைப் பின்பற்றி நடக்க சித்தமாக இருக்கும் சிலர் ஒன்றாக இணைகிறார் கள். காலத்தால், இவர்கள் கடைப்பிடிக்கும் வழி மதம் என்றும், இதை வழி நடத்துபவர், மதஸ்தாபகர் என்றும் நிச்சயிக்கப்பட்டு விடுகிறார்கள்.

இந்த விதமாகவே ஆரம்பத்தில் ஆத்ம தர்மம் இயல்பாகவே இருந்த புராதன தர்மமாகிய ஆதி சனாதன தர்மமும், பிறகு ஒன்றன்பின் ஒன்றாக இஸ்லாம், பௌத்தம், கிறித்துவம், சீக்கியம், சைவம், சமணம், ஜைனம், சந்நியாசம் என்று அவரவர் மனம் ஏற்றுக்கொண்ட அந்தந்த வழியில் ஒன்றிணைந் திருக்கிறார்கள் என்பது நிதர்சனம். இவ்வாறெல்லாம் எதனால் பிரிந்து கொண்டே போகிறார்கள், ஒற்றுமைக்குப் பதிலாக வேற்றுமைகளே விஸ்தாரமாகிக் கொண்டே யிருக்கின்றனவே என்று நினைப்பதற்குப் பதிலாக, இதில் என்ன நன்மை அடங்கியிருக் கின்றது என்று பார்ப்போம். இறைவன் ஒருவர் இருக்கின்றார். எல்லாப் புகழுக்குரிய வரும், பூஜைக்குரிய வரும் அவர் ஒருவர்தான் என்பது காலத்தால் மறைந்துவிடாமல், நினைவூட்டிக்கொண்டேயிருக்கும் சத்தான இந்த விதை, பலரால், பல்வேறு இடங்களில் பலவிதமாக, பலவிதப் பெயர்களில் நடப்பட்டும், நிலை நாட்டப்பட்டுக் கொண்டிருக்கிறதெனில் நாம் நமது சந்ததியினருக்காக விட்டுச் செல்லும் நினைவார்த்தங்கள் இதுவாகத்தானே இருக்க முடியும். இறைவனின் வருகை பற்றியும், அவர் அளித்த சத்திய ஞானமும், கற்றுத்தந்த ஆன்மீக நாகரீகமும், பாரதத்தின் சிறப்பும், காலத்தால் அழியாதிருக்க இது தானே சான்றாக இருக்க முடியும். இறைவனின் புகழ் எங்கும், என்றென்றும் நிலைத்திருக்க, நாடகத்தின் ஒரு அங்கமாக இப்படி பதிவு செய்யப்பட்டிருக்கிறது போலும்.

இந்த நாடகத்தில் பரமாத்மாவாகிய இறைவனுக்கு என்ன சம்மந்தம் உள்ளது? காலச்சக்கரத்தின் ஆரம்பகாலத்தில் தூய்மை யோடு பூலோக மேடைக்குவந்த ஆத்மாக்கள் பல பிறவிகள் எடுத்த பின்னர் காலத்தால், தீய கர்மத்தால் தூய்மையிழந்து, பண்புகளையும் இழந்து துயரத்திற்குள்ளாகிவிடும் நிலைக்கு ஆளாகிவிடுகிறது. இதன் உச்ச கட்ட நிலை காலச்சக்கரத்தின் முடிவான நேரமாக உள்ளது. அப்போது, நாடக ஆரம்பத்தில் உள்ள ஆத்மாக்களுக்கு தங்கள் சுய வரலாறு மறந்து போன நிலையில், ஆத்மாக்களுக்கு எங்கிருந்து வந்தோம், இதுவே சாசுவதமானதா? அல்லது வேறெங்காவது செல்ல வேண்டுமெனில் எங்கே செல்வது? ஒரே குழப்பம். விடுதலை கிடைத்தாலே போதுமானது என்ற நிலை.

எல்லா ஆத்மாக்களின் கதியும் இதுதான். சத்கதி அடைய வேண்டும் என்று தான் அறியாத இறைவனை மான சீகமாக நாடுகின்ற நிலை உருவாகிவிடுகின்றது.

இந்த இக்கட்டான சூழ்நிலையில்தான், ஆத்மாக்களின் துன்பம் துடைப்பதற்காகவும், முக்தியும், ஜீவன் முக்தியும் அளிப்பதற்காகவும், கலியுகத்தின் இறுதியான சங்கமயுகத்தில் பரமாத்மா பரகாய பிரவேசம் மூலம் திவ்ய அவதாரம் செய்கின்றார். இது நாடகத்தில் ஆற்றவேண்டிய பரமாத்மாவின் பங்காக இருக்கின்றது. அஞ்ஞான அந்தகாரம் எனும் இருள் நீங்குவதற்காக, ஞான ஒளிதர பரமாத்மா எடுக்கின்ற அவதாரமே சிவராத்திரி எனும் பெயரில் கொண்டாடப்படுகிறது. அப்போது பரமாத்மா ஆன்மீக விழிப்புணர்வு பெறுகின்ற ஞானமும், சத்கதியும் அளிக்கின்றார்.

இதன் மூலமாக ஆத்மாக்கள் தாங்கள் இழந்துவிட்ட தூய்மையை மீண்டும் பெறு கின்றன. சரீரம் மற்றும் கர்ம பந்தனங்களிலி ருந்து விடுதலை பெற்று, இடைக்கால ஓய்விற்காக தங்கள் அமைதி இல்லமாகிய பிரம்ம லோகத்திற்கு அசரீரியாகத் திரும்பு கின்றன. இந்த விடுதலையை பரமாத்மாவைத் தவிர, வேறு எவராலும் அளிக்க முடியாது. ஏனெனில் பரமாத்ம சக்தியின்றி, வேறு எதனாலும் சாத்தியமில்லை. இதன் ஞாபகார்த் தமாகவே ஜீவாத்மாக்களாகிய மனிதர்கள் பல்வேறு பெயர்களில் ஆலயங்கள் எழுப்பி வழிபாடுகள் பிரார்த்தனைகள் செய்கின்றனர்.

இவ்வாறாக இந்த நாடகத்தின் பிரதான அம்சங்களைப் பற்றி அறியும் போது, மிக உயர்ந்த நிலையில் தேவி, தேவதைகளாகப் படைக்கப்பட்ட மனிதன் இம்மாபெரும் அந்தஸ்தை எதனால் இழந்தான்? இழந்ததை யார் மூலமாகத் திரும்பவும் பெற்றான்? என்ற கருவை உள்ளடக்கிய ஒன்றாகவும், மனித நாகரீகத்தின் உயர்வையும், பிறகு அதன் வீழ்ச்சிக்கான காரணங்களையும் சுட்டிக்காட்டு வதாகவும் அமைந்துள்ளது. எல்லாமே முன் கூட்டியே நிச்சயிக்கப்பட்டது தானே என்று நம்மால் ஒதுக்கி விட முடிவதில்லை. ஏனெனில் நாம் அனைவரும் இதில் அடக்கம். ஒவ்வொரு நிகழ்வுக்கும் காரணம் உண்டு. இவ்வாறு கோர்வையாகவும், சுவாரஸ்யமாகவும் பின்னப்பட்ட கதையம்சம் கொண்டதாகவும் உள்ளது. ஆகவேதான் இது நாடகம் என்று சொல்லப்படுகிறது. நாடகம் 5000 ஆண்டு கால முடிவில், முடிவுறும்போதும், ஆத்மா மனிதப் போர்வையைக்களைந்து விட்டு, தங்கள் வீட்டிற்குச் செல்வதும், அங்கிருந்து மீண்டும் திரும்பி வரும்வரை ஓய்வெடுப்பதுமாக நாடகம் உள்ளது. ஆத்மாக்கள் ஓய்வெடுப்பதற் காகவே அமைதி இல்லமான பிரம்மலோகம் செல்கிறதேயொழிய, பரமாத்மாவுடன் ஐக்கியமாகி விடுவதற்கல்ல என்ற உண்மையைக் கருத்திற்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. ஏனெனில் ஆத்மாவுக்கு அழிவில்லை. ஆதலாலேயே இது திரும்பத் திரும்ப ஒரே மாதிரியாகவே நடக்கும். எல்லை யற்ற நாடகம். எல்லா வற்றையும் விட, பரமாத்மாவின் மூலமாக அறிந்து கொள்ளக் கூடிய நேரம் இப்போதுதான் என்பதை அறிய வேண்டும். இப்போதுதான் சங்கமயுகம். பூலோக நாடகமேடையில் பரமாத்மாவும், ஜீவாத்மாக்களும் சந்தித்து பரமாத்மாவிட மிருந்து, ஆத்மாக்கள் தங்கள் பிறப்புரிமையைப் பெறுகின்ற காலம். சந்திக்கும் இடமும் இங்குதான். வேறெங்குமில்லை. வேறு எப்போது மில்லை. இந்த சந்திப்புக்குப்பின் விடுதலை பெற்று ஓய்வுக்காக, ஆத்மாக்களாகிய நாம். நம் வீடு திரும்ப வேண்டிய நேரமும் இப்போது தான். கல்பத்திற்கொருமுறை கலியுக இறுதி யான சங்கமயுகத்தில் சிவபரமாத்மா அவதாரம் செய்கின்றார். இந்த அவதாரம் திவ்ய பிறவியாகும். ஆதலால் **இந்த கல்பத்தில் 1936ம் ஆண்டு** முதல் அவினாஷி ருத்ர ஞான

வேள்வி நடந்து கொண்டிருக்கிறது. இவ்வேள்வியில் மனிதனிடமுள்ள மன மாசுகள் அர்ப்பணிக்கப்பட்டு, தூய்மையாகி, மனித நிலையிலிருந்து, தேவ நிலைக்கு மாறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய தருணமாக இருக்கிறது. ஆதலால் "**2011 ஆம் ஆண்டு சிவராத்திரி நாள் 75 வது சிவ ஜெயந்தியின் புனித ஞாபகார்த்தப் பண்டிகையாகும். ஆதலால் இந்த ஆண்டு பிரஜாபிதா பிரம்மா குமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயத்திற்கு பிளாட்டினம் ஜூப்ளி ஆண்டாகும்".**

## FORM VI

## STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT SANGAMA YUGAM (TAMIL)

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | Shanthi Dham, Plot No.:3702, Q-96, 3rd Avenue, Annanagar, Chennai-40 |
| 2. Periodicity of Publication | : | Bi-Monthly |
| 3. Printers Name | : | T. THIYAKESAN |
| Nationality | : | Indian |
| Address | : | 2/3, Weavers St., Thankesh Printers, Triplicane, Chennai-5 |
| 4. Publisher's Name | : | B.K. ANNAPOORNA |
| Nationality | : | Indian |
| Address | : | Shanti Dham, Plot No.3702, Q-96, 3rd Avenue, Annanagar, Chennai-40 Ph: 26266765, 26267441 |

I, B.K. Annapoorna hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date: 31.03.2011

(SD)B.K. ANNAPOORNA,
Signature of Publisher.

### சென்டர் பொறுப்பு சகோதரிகளுக்கு - ஓர் விண்ணப்பம்

### 2010 - 2011 ஆண்டில், இது 6வது கடைசி இதழ்

2011-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் தங்கள் சென்டருக்குத் தேவையான சங்கமயுகம் இதழ் எண்ணிக்கையில் மாற்றம் இருந்தால், அஞ்சல் அட்டை மூலம் விவரம் தெரிவிக்கவும். தனிப்பிரதி விலை ரூ. 7.00 இதில் மாற்றம் இல்லை. ஆண்டு சந்தா அஞ்சல் வழி ரூ.55.00 இதிலும் மாற்றம் இல்லை. பணம் டிராப்ட் மூலம் அனுப்பினால் **SANGAMAYUGAM** என்ற பெயரில் எடுத்து பிரம்மா குமாரிகள், சாந்திதாமம், சென்னை என்கின்ற முகவரிக்கு அனுப்பவும். தனி நபர் சந்தாவும் புதுப்பித்தல் வேண்டும். மணியார்டர் மூலம் பி.கு. அன்னபூர்ணாஜி, சாந்திதாமம், சென்னை முகவரிக்கு அனுப்பவும். இதழ் தொடர்ந்து வெளிவர அன்புடன் ஆதரவளிக்கும் அனைவருக்கும் ஆன்மீக அன்பும் நன்றியும். ஆசிரியர்.




நிராகார் தந்தை சிவபரமாத்மா பரகாய பிரவேசம் செய்து தனது சொரூபத்தை மாற்றிக் கொள்கின்றார். ஸ்ரீ கிருஷ்ணர் தாயின் கர்ப்பத்தில் பரவேசம் செய்து ரூபத்தை மாற்றிக் கொள்கின்றார்.


**இனிமையான குழந்தைகளே!**

குழந்தைகளாகிய நீங்கள் நிராகாரிகள். பரந்தாமத்திலிருந்து இங்கு வந்து ஸ்தூல உடலைத் தரிக்கின்றீர்கள். மற்றெல்லா ஆத்மாக்களும் கூட ஒன்றன் பின் ஒன்றாக இங்கு வந்து ஸ்தூல உடலைத் தரித்துக் கொள்கின்றார்கள். அப்போது சதோபிரதானமாக சொர்க்கப்பூமியாக இருந்த இந்த உலகம் இப்போது பஞ்ச விகாரங்களால் தூய்மை இழந்து விட்டது. இந்த உலகில் ஸ்ரீ கிருஷ்ணர் வரமுடியாது. அவரோ, சொர்க்கத்தின் அதிபதி. ஸ்ரீகிருஷ்ணருடைய பெயர், ரூபம், தேசம், காலம், கடமை எல்லாமே தனிப்பட்டது. அவருக்குத் தன்னுடைய தாய், தந்தை உண்டு. ஆனால் நான் அவரைப்போன்று பிறவி எடுப்பதில்லை. படைப்பில் முதல் நம்பர் ஸ்ரீகிருஷ்ணர். இவர் அநேக ஜன்மங்கள் எடுத்த பிறகு பிரம்மாவின் 84வது கடைசி ஜன்மத்தில் வயோதிகப் பருவத்தில் பரகாய பிரேவசம் செய்கின்றேன். அப்போதுதான் இவருக்குப் பிரம்மா எனப் பெயரிடுகின்றேன். இவருக்குத் தனது ஜன்மத்தைப்பற்றித் தெரியாது.

இந்த உலக நாடகத்தில் ஒவ்வொரு வருடைய பார்ட்டும் தனிப்பட்டதாக இருக்கின்றது என்பதை குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள். இவ்வளவு சிறிய ஆத்மாவுக்கு எவ்வளவு பெரிய பார்ட்!. ஒவ்வொரு கல்பத்தின் கடைசியில் தர்மம் சீரழிந்து விடும்போது நான் வருகின்றேன். பக்தி மார்க்கத்திலும் கூட நான் தான் கொடுக்கின்றேன். ஈஸ்வரார்ப்பணம் என்று தானம், புண்ணியம் செய்வார்களானால் ஈஸ்வரன் தான் அதற்கானப் பலனைத் தரவேண்டும். இப்போது செய்தால், இதன் பலன் தனக்கு அடுத்த ஜன்மத்தில் கிடைக்கும் என்று நம்புகிறார்கள். இது இன்ஷ்யூரன்ஸ் செய்வது போல. ஆனால் நீங்கள் செய்யும் இன்ஷ்யூரன்ஸ் 21 ஜன்மங்களுக்கு. நீங்கள் உடல் மனம், பொருள் ஆகிய எல்லாவற்றையும் இன்றைய சங்கமயுகத்தில் இன்ஷ்யூர் செய்கிறீர்கள். உங்களுடைய இன்ஷ்யூரன்ஸ் எல்லைக்கப்பாற்பட்டது.

# ஒரே ஒரு பொழுதுபோக்கு சேவை சேவை மற்றும் சேவை

இராஜயோகி பி.கு. நிர்வயர்ஜி, தமிழாக்கம் பி.கு. சுவாதி



பிரம்மா பாபா, சிவபாபாவின் பிரவேசத்திற்கு முன்பு சத்தியத்தை அறிந்து கொள்வதற்கும் மேலும் சாத்வீக வாழ்க்கையை உருவாக்கிக் கொள்வதற்கான வழியை அடைய முயற்சித்துக் கொண்டிருந்தார் ஆகவே பாபா ஒரு குருவிடம் சென்றார், இரண்டாவது குருவிடம் சென்றார், மூன்றாவது குருவை ஏற்றார், நான்காவது குருவை ஏற்றார்.... இவ்வாறு 12 குருவை ஏற்றிருந்தார். மும்பையில் பபுல் நாத் கோவில் உள்ளது, அதன் விருந்தினர் மாளிகையில் பாபா 1936ம் ஆண்டு தங்கியிருந் தார். அவருடைய 12-வது குருவும் அந்த நேரத்தில் அங்கு இருந்தார். மேலும் அந்த நேரத்தில் பிரம்மா பாபாவிற்கு சிவபாபா தனது சாட்சாத்காரத்தை செய்வித்தார். பாபா அப்பொழுது இது என்னுடைய குருவின் கிருபை என்றே நினைத்தார். குருஜியிடம் அந்த மகிழ்ச்சியான செய்தியை எடுத்துக் கொண்டு சென்றார். குருஜி, இது என்னுடைய கிருபை அல்ல, என நேரடியாகவே கூறி விட்டார். அதன் பின்பு பாபாவுடைய வாழ்க்கையில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பம் ஆனது. பாபா தனது பங்காளியிடமிருந்து பங்கை பிரித்துக் கொண்டார். பாபாவிற்கு கிடைத்த பங்கு தான் யக்ஞ ஸ்தாபனையில் விதையாக ஆகிவிட்டது. அந்த விதையின் குளிர் விருட்ச மானது உள்நாடு மேலும் வெளிநாட்டிலும் பரவியுள்ளது.

## கடற்கரையிலும் மேலும் மலை மீதும் தபஸ்யா:

ஆரம்பத்தில் யக்ஞத்தில் 380 சகோதர-சகோதரிகள் இருந்தனர். சிறிய குழந்தை, பெரியவர்கள், குடும்பம் குடும்பமாக அந்த நேரத்தில் சமர்ப்பணம் ஆகினர். ஒரு வருடம் சிந்து-ஹைதராபாத்தில் இருந்தனர். 12 வருடம் கராச்சியிலும் பின்னர் 1950ல் அபுவிற்கு வந்து விட்டனர். சிவபாபா கட்டளைப் பிறப்பித்தார். கடற்கரையில் அதிக அளவு தபஸ்யா செய்து விட்டீர்கள், இப்பொழுது மலையின் மீது சென்று தபஸ்யா செய்ய வேண்டும். அனைத்து இடங்களையும் பார்த்த பின்னால் மவுண்ட் அபு மலை அனைத்திலும் பிடித்தமானதாக இருந்தது.

## ஆத்ம அனுபவம் மேலும் அதீந்திரிய சுகத்தின் அனுபவம்:

நான் ஞானத்திற்கு பிப்ரவரி 1, 1959ல் வந்தேன். மேலும் பாபாவை 13, ஜுலை 1959ல் சந்தித்தேன். பாபாவுடைய தொடர்பின் அந்த நொடியின் அனுபவம் மறக்க முடியாதது. இன்று நடந்தது போல எண்ணத்தில் தெளிவாக உள்ளது. பாபாவுடன் 10 வருடம் கழித்தேன். 10 வருடங்களில் அனேக முறை மதுவனத்திற்கு வருவதற்கான மேலும் சாகார பாபாவுடன் சந்திப்பதற்கான சௌபாக்கியம் கிடைத்தது. பாபா அவ்யக்தமான பின்னால் எப்பொழுது தாதிஜி அபுவில் தங்க ஆரம்பித்தாரோ அப்பொழுது அவர் என்னையும் கூட மும்பையிலிருந்து இங்கே அழைத்துக் கொண்டார். சாகார பாபாவுடன் முதன் முதலாக எவ்வாறு அந்த நேரத்தில் சந்திப்பு நடைபெற்றது, அவ்வாறு தான் இப்பொழுதும் கூட உள்ளது. குல்சார் தாதிஜி டைமண்ட் ஹாலில் வந்து அமர்வார், பின்பு சிவபாபா வருகின்றார் எனில் முதலாவதாக ஆன்மீக சந்திப்பு செய்கிறார், ஒவ்வொருவருக்கும் திருஷ்டி தருகிறார்,

ஆத்மாவுடன் சந்திப்பு செய்கிறார் அதுபோல தான் எனக்கும் கூட முதலாவதாக எப்பொழுது பாபாவுடன் சந்திப்பு நடைபெற்றதோ அப்போது பாபா ஆசனத்தில் அமர்ந்திருந்தார், அருகில் மம்மா அமர்ந்திருந்தார். பாபா திருஷ்டி கொடுத்துக் கொண்டேயிருந்தார். என்னுடைய மனதில் ஒரே ஒரு எண்ணம் தான் இருந்தது, எந்த பாபாவை நான் முரளியின் வாயிலாக அறிந்துக் கொண்டேனோ, கடித போக்குவரத் தால் அறிந்து கொண்டேனோ அவரை இன்று சாகாரத்தில் அனுபவம் செய்ய வேண்டும். பாபாவின் முன்பாக 30-40 வினாடிகள் கடந்திருக்கும், திருஷ்டியின் மூலமாக அன்பு மேலும் சக்தியின் அனுபவம் ஏற்பட்டது. அதன் பலன் சொரூபமாக, ஆத்ம அனுபவம் மேலும் அதீந்திரிய சுகம் அனுபவம் ஆனது. இந்த அனுபவத்தால் முன்பு இருந்த நம்பிக்கை மேலும் கூட உறுதியாகிவிட்டது. அதாவது உண்மையாகவே பாபா நீங்கள் இந்த பூமியில் வந்து உங்களுடைய நடிப்பை நடித்துக் கொண்டிருக்கிறீர்கள், இன்றிலிருந்து இந்த வாழ்க்கையை உங்களுடைய சேவை யில் அர்ப்பணம் செய்கிறேன் என மனதோடு மனதாக பாபாவுடன் உறுதிமொழி எடுத்தேன். மேலும் பாபாவின் நினைவில் மூழ்கியிருந் தேன் அதன் பின்பு பாபாவை மிகுந்த அன்போடு மற்றொரு சகோதரரும் சந்தித்தார், சிறிது நேரம் பாபா மிகவும் அன்புடன் விவரங் களை கேட்டறிந்தார். சிறிது ஞானமும் கூறினார்.

## ஞான தானம் செய்த பின்பு தான் சிற்றுண்டி உண்ண வேண்டும்:

பாபாவிற்கு ஆன்மீகத்தின் மீது அத்தனை அன்பு இருந்தது, அதனை தவிர்த்து வேறு எந்த விசயத்தையும் பற்றி பேசுவதில்லை. உலகாயத விசயத்தில் நேரத்தை முற்றிலுமாக செலவிடவில்லை. பாபாவிற்கு முரளி மீது மிகவும் அன்பு இருந்தது. எனது முழு ஈர்ப்பும் பாபாவுடைய நெற்றியின் மீதும், கண்களின் பக்கமே இருந்தது. பாபாவுடைய வார்த்தை களை நீங்கள் டேப் மூலமாக கேட்டிருப்பீர்கள், அப்படிப்பட்ட சப்தமானது உலகத்தில் வேறு எவருக்கும் இருக்க முடியாது. பாபாவுடைய வாாத்தையில் இருந்த உயர்வு வேறு யாருக்கும் இருப்பதில்லை. பாபாவுடைய சந்திப்பிற்கு பின்னால் பிரம்மா பாபா கேட்டார், குழந்தாய் இன்று காலையில் பாபாவின் முரளி மிகவும் நன்றாக இருந்ததா? மிகவும் விலை மதிப்பில்லாத ஞான ரத்தினங்களை பாபா கொடுத்தார் அல்லவா? இப்பொழுது பாபாவை சந்தித்து விட்டீர்கள் முதலில் முரளி படிக்க வேண்டும் பின்பு உணவு அருந்த வேண்டும். பாபாவின் இந்த கொள்கையை மேலும் கூட உறுதி செய்தார். முதலாவதாக பாபாவின் நினைவு பின்பு முரளி அதன் பிறகு எவருக்கும் ஞானத்தின் இரு வாக்கியங்களை சொல்லிவிட்டு சிற்றுண்டி அருந்த வேண்டும்.

## சதா எல்லையற்ற சேவை:

நாங்கள் முதன் முதலாக பாபாவுடன் சந்திக்க வந்தபோது வெளியிலிருந்து வரக் கூடியவர்கள் 5-6 பேர் மட்டுமே இருந்தனர். ஆனால் முரளியில் மதுவனத்தில் எல்லையற்ற திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என குறிப்பு எழுதப்பட்டு அனுப்பப்பட்டது. நாங்கள் ஒரு வாரம் பாபாவுடன் சேர்ந்து இருந்தோம், சற்று யோசித்துப் பாருங்கள்! முழு நாளும் நாங்கள் என்ன செய்துக் கொண்டிருப்போம் என்று. காலையில் 10-15 நிமிடம் தியானம் நடை பெற்றது, அதன் பின்பு முரளி நடைபெறும், பின்பு பாபாவின் அறையில் அமர்ந்திருப்போம். சிலர் கவிதை சொல்வார்கள், சிலர் பாடல் பாடுவார்கள், பின்பு பாபா இரு வார்த்தைகள் கூறுவார், டோலி தருவார். ஈஸ்வரிய அன்பு, ஈஸ்வரிய பாலனை இவை அனைத்தையும் அந்த நேரத்தில் பாபா மற்றும் மம்மா நேரிடை யாக அளித்து வந்தனர். பிறகு நாங்கள் சிற்றாண்டி உண்ண செல்வோம். என்ன முரளி

சொல்லப்பட்டது அதன் ஆதாரத்தில் பிரம்மா பாபா, அந்த நேரத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த பெரிய தாதி, ஜானகிதாதி, குல்சார்தாதி, ஜெகதீஷ் சகோதரர், கங்கே தாதி போன்ற அந்த சேவாதாரி குழந்தைகளுக்கு உடனடியாக கடிதம் எழுதுவார். அதில் பாருங்கள் இன்று பாபா என்னென்ன ஞான ரத்தினங்களை கொடுத்திருந்தார், அதனை நல்ல விதத்தில் சிந்தனை செய்து பின்பு மற்றவர்களுக்கு புரிய வைக்க வேண்டும். பாபாவிற்கு சதா எல்லையற்ற சேவையானது எதிரில் இருந்தது மேலும் கடிதம் கூட அந்த முறையில் தான் அனைவருக்கும் எழுதினார். யாரிடமிருந்து கடிதம் வருகின்றது அதற்கு பாபா தானே கடிதம் எழுதுவார். பொதுவாக கடிதம் எழுதிவிடுவது, பிரதி எடுத்து அனுப்புதல் என்று செய்துவிட மாட்டார். ஒவ்வொரு வருக்கும் தனிப்பட்ட முறையில் எத்தனை கடிதங்கள் தினமும் பாபா எழுதி வந்தார் தெரியுமா? 30-35 கடிதங்கள். யார் ஈஸ்வரிய சேவையில் நிமித்தமாக இருந்தனரோ அவர்களுக்கு தினமும் பாபாவின் கடிதத்தை பெற முடியவில்லை எனில் துடித்து போய்விடு வார்கள், இன்று பாபாவின் கடிதம் ஏன்வர வில்லை என்று.

பிரம்மா போஜனம் ஆரம்பமாவதற்கு முன்பாக அங்கே எத்தனை சகோதர-சகோதரி கள் அருகில் அமர்ந்திருந்தனர் அவர்கள் ஒவ்வொருவருக்கும் தன்னுடைய கைகளினா லேயே பரிமாறுவார். அங்கே அனைவரும் பெரியவர்களாக, (வயதில்) இருந்தனர். யாரும் சின்ன குழந்தையாக இருக்கவில்லை. இருப்பினும் கூட வாயில் ஊட்டிவிட்டார். ஏனெனில் பாபாவின் ஒவ்வொரு விசயத்திலும் ரகசியம் இருந்தது. எப்பொழுது குழந்தைகள் பாபாவிற்கு எதிரில் வந்தனர் பாபா அவருக்கு திருஷ்டி தருவார். சாப்பிடுபவர்களின் கவனம், உணவின் மீது அதிகம் செல்லாமல் பாபா டோலி அளித்துக் கொண்டிருக்கின்றார், உணவு கொடுத்துக் கொண்டிருக்கின்றார் என அந்த பொருள்மீது கவனம் செலுத்தாமல் திருஷ்டி யின் மகத்துவம் அதிகம் இருந்தது. பாபா அந்த அளவிற்கு அன்பின் பாலனை கொடுத்தார்.

## சர்வ சம்பந்தத்தின் அனுபவம்:

மாலை நேரத்தில் ஒரு மணி நேரம் தினமும் பாபாவுடன் பேட்மிட்டன் விளையாடு வது உண்டு. இரண்டு அணி இருக்கும், அது மம்மாவின் அணி, மேலும் பாபாவின் அணி. யார் ஜெயித்துவிட்டனர், அவர்களுக்கு ஒரு டோலி, யார் தோல்வி அடைந்து விட்டனரோ அவர்களுக்கு இரண்டு டோலி, இப்படி ஏன்? யார் தோல்வி அடைந்து விட்டனரோ அவர்கள் இரண்டு டோலி சாப்பிட்டு அடுத்த முறை ஜெயிக்க வேண்டும். அதிகமான வகுப்பு இருக்கவில்லை ஆகவே நாங்கள் யக்ஞத்தின் பழைய ஆல்பத்தை பார்த்துக் கொண்டிருப் போம். அந்த ஆல்பத்தில் பாபா ஆரம்ப காலத்தில் சந்தேஷிகள் மூலமாக வதனத்தில் சத்யுகத்தில் என்னென்ன காட்சிகள் பார்த்தனர் போன்ற போட்டோக்கள் இருந்தன. விஷ்வரத்தன் தாதாவின் அனுபவம், பிறர் யாரேனும் அனுபவத்தை கேட்கும்போது நேரம் கழிவது கூட தெரியாது. மிகவும் சுவையானதாக இருக்கும். அந்த விசயங்கள் அனைத்தும் இரவில் கொஞ்சம் நேரம் வகுப்பு இருக்கும். அதில் கடிதம் அல்லது சேவையின் செய்திகள் சொல்லப்படும். அதற்கு நடுவில் சிலநேரம் பாபா வின் அறையில் அமர்வதுண்டு, சிலநேரம் குடிசையில் அமர்வதுண்டு. இவ்வாறாக பாபாவை நாம் புகழ் பாடுகிறோம், தாயும் நீயே, தந்தையும் நீயே, நண்பன், துணைவன் நீயே அந்த அனைத்து சம்பந்தத்தின் அனுபவத்தை யும் செய்வித்தார். அப்படியெனில் சற்று சிந்தியுங்கள் இப்படியொரு அனுபவம் ஏற்படும் பொழுது பாபாவை எப்படி நாம் விட்டுவிட முடியும்? ஏழு நாட்களுக்கு பின்பு நான் செல்ல வேண்டியிருந்தது. பாபா கூறினார் - குழந்தை

இது உன்னுடைய வீடு, எவ்வளவு காலம் இருக்க விரும்புகிறீர்கள், இருக்கலாம், ஆகவே நான் மூன்று நாட்கள் மேலும் இருந்தேன். ஆனால் பிறகு செல்ல வேண்டியிருந்தது. ஏனெனில் பரீட்சை இருந்தது. திரும்பி சென்ற பின்னால் முதல் வேலையாக கமாண்டர் ஆபீசருக்கு வேண்டுதல் கடிதம் எழுதினேன். அதில் என்னுடைய நிரந்தர முகவரியை மாற்றி பிரம்மா பாபா, பாண்டவ பவன், மவுண்ட் அபு என செய்து விடுங்கள் என்றேன். அன்றிலிருந்து இன்று வரை இது தான் என்னுடைய முகவரி. இது வரை சுமார் 50 வருடங்கள் ஆகிவிட்டன.

### பழைய பழக்கங்களிலிருந்து சகஜமான வைராக்கியம்:

பாபா அக்டோபர், 1959ல் மும்பைக்கு வந்தார், நான் பாபாவை சந்தித்துவிட்டு திரும்பி வந்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது என்னுடைய காதுகளில் பாபா கூறினார், குழந்தாய், என்ன ஞானத்தின் விசயங்களை கேட்டாயோ அதனை நடைமுறை வாழ்க்கையில் கொண்டுவரவேண்டும். சார்ட் எவ்வாறு எழுத வேண்டும் மேலும் ஒவ்வொரு வாரமும் பாபாவிற்கு அனுப்ப வேண்டும். மேலும் ஆன்மீகத்தை வாழ்க்கையில் எந்த அளவு கொண்டு வந்துள்ளேன், அதன் நடை முறை சான்றை காட்ட வேண்டும். மீண்டும் பாபா மும்பை வந்தபோது எனக்கு சேவை செய்ய கற்றுத்தந்தார். ஞானத்தை எவ்வாறு புரிய வைக்க வேண்டும், வி.ஐ.பி.க்களை எவ்வாறு சந்திக்க வேண்டும், பாபாவுடன் யார் யாரை சந்திக்க வைக்க வேண்டும், இவ்வாறு பல்வேறு விசயங்களை பாபா புரிய வைத்தார். யக்ஞத்தின் நடைமுறைகளையும் கற்றுத்தந்தார். அந்த நேரத்தில் மனதில் இந்த எண்ணம் தான் வந்தது. அதாவது என்னிடம் அதிகளவு நேரம் உள்ளது அது அனைத்தையும் ஈஸ்வரிய சேவையில் தரவேண்டும். சில நேரங்களில் கோவில் சேவை, சில நேரங்களில் செய்தியாளர்களுக்கு சேவை மேலும் சில நேரம் விமானத்தில் உள்ளவர்களுக்கு சேவை. எந்த நேரமும் கேளிக்கையிலும், சுற்றுவதிலும், சென்று விடக் கூடாது. சினிமாவிற்கு செல்வது என்றில்லாமல் இந்த ஞானம் கிடைத்த பின்பு மனதில் வந்துவிட்டது, நான் தேவதை ஆக வேண்டும் எனவே போஜனம் எவ்வாறாக இருக்க வேண்டும், பின்பு இவ்வாறாக சிந்தனை சென்றது இந்த எல்லையற்ற சிருஷ்டி நாடகத்தை நாம் பாாத்துக் கொண்டிருக்கின்றோம், ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட நடிப்பு உண்டு, பின்பு ஏன் சினிமா பார்க்க வேண்டும், இதனால் சினிமா பார்ப்பது நின்றுவிட்டது.

நான் பாபாவிற்கு என்னுடைய பொழுது போக்கை பற்றி கூறினேன். அப்பொழுது பாபா அதற்கு பதில் அளித்தார் குழந்தாய் - உன்னிடம் ஒரே ஒரு பொழுது போக்கு இருக்க வேண்டும் - சேவை, சேவை மற்றும் சேவை. வேறு எந்த பொழுது போக்கும் இருக்கக் கூடாது. அன்றிலிருந்து மனதில் உறுதி ஏற்பட்டுவிட்டது. இந்த ஆன்மீக வாழ்க்கையை பாபா கொடுத்துவிட்டார் எனில் அது ஈஸ்வரிய சேவைக்காகவே வேறு எதற்காகவும் இல்லை.

### ஜென்ம நாளின் பரிசு

நான்கு-ஐந்து வருடம் கப்பற்படையில் பணி புரிந்த பின்பு என்னுடைய மனதில் தோன்றியது நான் முழு நேரமும் ஈஸ்வரிய சேவை செய்ய வேண்டும். ஆனால் 10 வருடங்களுக்காக ஒப்பந்த கையெழுத்து செய்துள்ளேன், இப்பொழுது 5 வருடம் கூட ஆகவில்லை. பயிற்சிக்கு பின்பு. அப்போது எனக்கு 25 வயது ஆகியிருந்தது. அந்த நாளில் ஒரு புறம் எனக்கு கிடைத்தது பிறந்த நாள் பரிசுதான் அது நான் முழுமையாக சமர்ப்பணம் ஆவதற்கு காரணம் ஆகிவிட்டது. சாகார பாபா அந்த சமயம் மும்பையில் தான் இருந்தார்.

அப்பொழுது பாபாவுடன் தான் இருந்தேன். அந்த சமயம் ஸ்வாமி சின்மாயனந்தாஜி அங்கு வந்திருந்தார். அவருடைய சொற்பொழிவை கேட்பதற்கு பொது மக்கள் நிறைய பேர் வந்துக் கொண்டிருந்தனர். பாபா என்னை அனுப்பி வைத்தார். அவருடைய சொற்பொழிவை கேள், குறிப்பு எடுத்துக் கொண்டு வா மேலும் பாபாவிற்கு சொல்ல வேண்டும். நானும் பாபாவிற்கு அதனை கூறினேன். அடுத்த நாள் முரளியில் பாபா அதன் தொடர்புடையவற்றை ஞானத்தின் ஆழமான விசயங்களை கூறினார். பின்பு பாபா கேள்வி எடுத்துக் கொடுத்து அவரிடம் இதனை சென்று கேட்டு விட்டு வா! என கூறினார். இவ்வாறு மிக ருசிகரமான உரையாடலாக இருந்தது. பண்டித நேருவிற்கும் கூட பாபா புத்தகங்களை தருவதற்காக என்னை அனுப்பி வைத்தார். பாபா அந்த அளவிற்கு ஞானத்தின் போதையை ஏற்படுத்தினார். அதாவது லட்ச ரூபாய்க்கு பெருமானமான ஞான ரத்தினங்கள் எங்களுக்கு கிடைத்துள் ளது, ஒவ்வொரு ஞானத்தின் கருத்துக்களும் எப்பேற்பட்ட தாரணை செய்ய வைக்கின்றது, எவ்வாறாக வாழ்க்கையை மாற்றி அமைக் கின்றது. என்ன சுபாவத்தை உருவாக்குகிறது, இப்படிப் பட்ட விசயங்களை பார்க்கும்போது நான் ஏற்றுக் கொள்கிறேன். நம்மைப்போன்ற அதாவது சங்கமயுக பிராமணர்களைப் போன்ற அதிர்ஷ்டசாலிகள் உலகில் வேறு யாரும் இருக்கவே முடியாது.

# நந்தி



சிவபரமாத்மா உருவத்தில் புள்ளி வடிவானவர். பிரகாசமான ஜோதி சொரூபம். ஆதலால் அசரீரி, நிராகார் எனலாம். வழிபாட்டிற்காக சிவன் கோவில்களில் லிங்க ரூபம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. சந்நிதானத்திற்கு எதிரில் சிவலிங்கத்தை நோக்கும் முகமாக நந்தி பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதைப் பார்த்திருக்கிறோம், தரிசித்திருக் கிறோம். பக்தி மார்க்கத்தில் சிவன் சவாரி செய்யும் வாகனம் என சித்தரிக்கப்பட்டுள்ளது. இதன் உண்மைப் பொருள், சிவபரமாத்மாவாகிய சிவன் பதீதபாவன் என அழைக்கப் படுவதற்கிணங்க. கலியுக இறுதியில் எல்லா ஆத்மாக் களையும் பாவனம் (தூய்மை) செய்து, முக்தி அளிப்பதற்காக, ஒரு சாதாரண வயோதிக உடலில் பிரவேசித்து, அதிகாரியாக அதனைத்தன் காரியத்திற்கு ஆதாரமாகப் பயன்படுத்து கின்றார். இந்த மாதிரியான சவாரிதான் சிவபரமாத்மா செய்கின்றார். அப்போது தான் ஆதாரமாக எடுத்துக் கொண்ட சரீரத்திற்கு பரமாத்மா இட்ட பெயர் தான் பிரம்மா. பிரம்மாவுக்கு நந்தி தேவர் என்ற பெயரும் உண்டு. நந்தியின் வாய் மூலமாக கங்கை வருகிறது என்று நாம் கூறுவது, சிவபரமாத்மா பிரம்மாவின் வாய் மொழியாக எல்லா ஆத்மாக்களுக்கும் முக்தியும், ஜீவன் முக்தியும் அடைவதற்கான வழி காட்டும் ஞான கங்கையை அருள்கின்றார் என்பதன் அடையாளமாகும்.



# சிவராத்திரி பண்டிகை கொண்டாடுவது எப்படி? அவரை அடைவது எப்படி? அவரிடமிருந்து வரம் பெறுவது எப்படி?

உண்மையில் ராத்திரி என்ற பதம், 24 மணிநேரத்திற்கு ஒரு முறை நிகழும் அந்தகார இருளைக் குறிப்பதல்ல. மாறாக இது அநியாயம், பாவச் செயல், கொலை, கொள்ளை, வன்முறை, ஒழுக்கமின்மை காரணமாக நிகழக் கூடிய அழிவு அல்லது வீழ்ச்சி என்பதைக் குறிப்பதாகும்.

இந்த மாதிரியான, தமோபிரதான நேரத்தில் மனித ஆத்மாக்களுக்கு மங்களம் செய்வதற்காக சிவப்பரமாத்மா இந்த பூமியில் அவதாரம் செய்கின்றார். இதன் ஞாபகார்த்த பண்டிகை தான் சிவராத்திரி. இதற்கு முன்பு தர்ம ஸ்தாபகர்கள் இங்கு வந்த போதெல்லாம் இவ்வளவு அந்தகாரம் இருக்கவில்லை. எப்போது முழு உலகிலும் அதர்மம் உச்சக் கட்டத்தை எட்டி விடுகிறதோ, அப்போது தான் பரமாத்மா அவதரிக்கின்றார். மகான் ஆத்மாக்கள் செய்கின்ற கடமை மகானாக இருக்கின்றது. பரமாத்மா செய்கின்ற கடமை பரம் ஆக அதாவது சர்வ மகானாக இருக்கின்றது. பரமாத்மாவினுடைய திவ்ய அவதாரம் அதாவது அவதாரத்திற்கான சுபவேளையானது எப்போது எல்லாமே அசுபமாக அமங்கல நிலையுடையதாகி விடுகின்றதோ அந்த வேளை தான் அவதாரம் செய்யும் வேளையாக இருக் கின்றது.

### கலியுகம் என்றாலும், ராத்திரி என்றாலும் ஒன்று தான்.

தமோபிரதானம் ஆகிவிட்ட நேரம் கலி யுகத்தின் கடைசி நேரமாகவே இருக்கின்றது. ஏதாவது எதிர்பாராத அல்லது சாதாரணமாக நடக்கக்கூடாத சம்பம் நடந்தால், மனிதர்கள் என்ன கூறுகின்றார்கள். இது கலியுகம். இப்படித் தான் இருக்கும் என்று சர்வ சாதாரணமாக சொல்வதைப் பார்க்கின்றோம். ஆதலால் பரமாத்மா அவதரிக்க வேண்டிய, அவசியமான நேரமும் இதுவாகத்தான் இருக்க வேண்டும் என்பதும் தெளிவாகிறது. துக்க ஹர்த்தா, சுக கர்த்தா என்று அழைப்பதும் பரமாத்மாவைத் தான். துக்கத்தை நீக்கி, சுகம் அளிப்பவர் என்பதைப் புரிந்து தான் ஹர, ஹர மகாதேவ் என்கிறார்கள். பாவத்தை நீக்குபவர், தேவர் களுக்கெல்லாம் மகாதேவனாக இருக்கும் பரமாத்மா என்பதாகும். துக்கம் நிறைந்துவிட்ட கலியுகத்தை, சுகம் நிறைந்த சத்யுகமாக பரிவர்த்தனை செய்பவர் பரமாத்மா. கலியுகத்தில் எந்தெந்தவிதமான துக்கம் இருந்ததோ அது அழிந்து விடும். இதன் காரணமாக, கலியுக அழிவு, சத்யுக ஸ்தாபனை என்று சொல்லப்படுகிறது. இந்த சிரேஷ்ட காரியத்திற்காக, அதாவது உலக முழுவதிலும் எல்லோருக்கும் நன்மை ஏற்படக்கூடிய காரியத்தை, வேறு எவராலும் ஆக முடியாத காரியத்தை செய்வதற்காக பரமாத்மா அவதரிக்கின்றார் என்பதால், அவர் **யுக பரிவர்த்தனை செய்பவர், யுக புருஷர், கல்ப புருஷர்** என்றெல்லாம் மகிமைக்குரியவராகின்றார். இதன் மூலம் அதர்மம் உச்ச கட்டமாக இருக்கும் காலத்தில் அதாவது கலியுகத்தின் இறுதியான நேரத்தில் சிவபரமாத்மா அவதாரம் செய்கின்றார் என்பது உறுதி யாகின்றது.

### சிவபரமாத்மாவின் அவதார நாளுக்கான குறிப்பு ஏதாவது உண்டா?

உதாரணமாக ஸ்ரீ ராமருடைய ஜன்ம தினம் நவமி திதி என்றும், ராம நவமி என்றும் குறிப்பிடுகிறார்கள். இது போல ஸ்ரீ கிருஷ்ணருடைய ஜன்ம தினம் அஷ்டமி திதி என்றும் ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி என்றும்

குறிப்பிடுகின்றார்கள். இது போன்ற திதி சிவபரமாத்மாவுக்கு ஏன் குறிப்பிடப் படவில்லை என்ற கேள்வி எழுகிறது. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, ஸ்ரீ ராம் மற்றும் ஸ்ரீ கிருஷ்ணர் ஆகியோருடைய ஜன்மம் தேகத்தைப் பற்றியது. தங்களுடைய தாய், தந்தை யருக்கு சிசுவாகப்பிறந்து, அவர்களால் வளர்க்கப்பட்டு, பரிபாலனை செய்யப் பட்டவர் கள். இவர்களுடைய தாய் தந்தையர், இவர் களுடைய ஜன்ம தினத்தைப்பற்றி அறிவார்கள். ஆனால் சிவபரமாத்மா சுயம்புவானவர். இவருக்கு தாய், தந்தை இல்லை. சிசுவாகப் பிறப்பதுமில்லை. மாறாக, ஒரு சாதாரண வயோதிக மனித சரீரத்தில் பிரவேசம் செய் கின்றார். அதாவது சிவபரமாத்மா சுயமாக ஆட்கொண்ட சரீரத்தின் மூலம் இந்த பூலோகத்தில் அவதாரம் செய்திருக்கிக்கிறேன் என்ற அறிமுகத்தை தானே அளிக்கின்றார். அதாவது அவரே தன்னை பிரகாச சொரூபம் சிவோஹம் என அறிமுகம் செய்கின்றார். எந்த ஒரு சரீரத்தை சிவபரமாத்மா ஆட் கொண்டாரோ, அவருக்கு பிரஜாபிதா பிரம்மா என பெயர் சூட்டுகின்றார். இந்த பிரம்மா ஏற்கனவே பிறவி எடுத்திருப் பவர். ஆனால் பிறவிக்கு அப்பாற்பட்டிருக்கும் அசரீரியான ஜோதி சொரூபமான பரமாத்மா பிரம்மாவின் உடலில் அதாவது வேறொரு சரீரத்தில் பிரவேசம் ஆகின்ற காரணத்தால், இவ்வித மான பிரவேசம் பற்றிய நேரத்தை உடனே யாராலும் அறிந்து கொள்ள முடியவில்லை. மேலும் ஸ்ரீ ராமர், ஸ்ரீ கிருஷ்ணர் பிறப்பு முதல், அவரவர் சரீரத்திலேயே அந்திம காலம் வரையிலும் இருந்து கொண்டிருக் கின்றார்கள். இவர்களைப் போல சிவபரமாத்மா, தான் ஆட்கொண்ட சரீரத்திலேயே காலம் பூராவும் இருப்பதில்லை. மாறாக, ஒவ்வொரு நாளும், கொஞ்ச நேரத்திற்காக தன்னுடைய இருப்பிடமாகிய சிவலோகத்திலிருந்து (பரந்தாமம்) வருகின்றார். தான் ஆட் கொண்ட சரீரத்தின் வாய்மொழி யாக, ஜீவாத்மாக்களின் முக்தி, ஜீவன் முக்திக்கு ஆதாரமா யிருக்கின்ற ஞான யோகத்திற்கான அறிவுரைகளை வழங்கியவுடன், தனது இருப்பிடத்திற்குத் திரும்பிச் சென்று விடுகின்றார். இம்மாதிரியான தனது கடமை சத்யுக ஸ்தாபனை வரையிலும் நடக்கும் என்பது பரமாத்மாவினுடைய மகா வாக்கியமாகும். பரமாத்மா எப்போது தன்னை பிரகாச சொரூபம் சிவோஹம், நிஜானந்த சொரூபம் சிவஹோம் என்று பிரஜா பிதா பிரம்மாவின் கர்மேந்திரியமான வாய் மொழி யாக அறிமுகம் செய்கின்றாரோ, அந்த நேரம் கலியுகத்தின் இறுதியான நேரம் என்பதை யும் அவர் மூலாகவே அறிகின்றோம்.

### சிவபரமாத்மாவை சந்திக்கவும், வரம் பெறவும் முடியுமா?

முன்பே அறிந்துள்ளபடி, பரமாத்மாவுக்கு சரீர ரூபமில்லை. அவருடைய ரூபம் ஆத்மீக ரூபம் அதாவது திவ்ய ஜோதி சொரூபம். ஆதலால் பரமாத்மாவோடு சந்திப்பு நிகழ வேண்டுமானால், தான், ஒரு சரீரம் என்ற எண்ணத்தை விலக்கி, தானும் ஆத்மா தான் என்பதை உணர்ந்து, ஆத்மீக சொரூபத்தில் நிலைக்க வேண்டும். ஏனெனில், ஆத்மீக ஸ்திதியில் நிலைத்திருந்துதான் பரம ஆத்மா வைப் பார்க்க முடியும் என்பது விதியாக, நியமமாக நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. (அவ்யக்த மாக இருப்பவரை, அவ்யக்த ரூபத்தில் நிலைத்திருந்து தான் சந்திக்க முடியும்) அதாவது சரீரமற்ற பரமாத்மாவை, சரீரமுடைய ஆத்மா, அந்த சரீர உணர்விலிருந்து விடுபட்ட ஆத்மீக நிலையில் இருந்து தான் சந்திக்க முடியும் என்பதாகும். சரீரம் என்ற உணர்வுடன் அல்லது வேறொரு சரீர தாரியின் நினைவுடன், அசரீரியான நிராகார் பரமாத்மாவுடனான மானசீக சந்திப்பு நிகழ்வது சாத்தியமில்லை. ஏனெனில் பரம ஆத்மாவாக இருப்பவர் ஒருவர் தான். மற்ற எல்லோரும் பஞ்ச விகாரங்களில், ஏதாவதொரு விஷம் நிறைந்தவர்களாகவே இருக்கிறார்கள். உண்மையில், பரமானந்த அனுபவம் பெற வேண்டும் என்ற விருப்பம் உடையவர்களாக இருந்தால், தங்களுடைய

மனதிலிருந்து விஷத்தை விலக்கி, பரமாத்மா ஒருவரிடம், மனதை ஒருமுகப்படுத்த வேண்டும். பரமாத்மா வுடன் சந்திப்பு உண்டாவதற்காக, தேக உணர்வை முற்றிலு மாக மறந்து ஆத்மீக பாவனையில் மனதை லயிக்க வேண்டும். அப்போது தான் வாழ்க்கை யின் உண்மையான சுகம் அனுபவமாகும். மற்றெல்லா பற்றும் விலகி, ஒருவரிடம் பற்று உண்டாகும். இலக்ஷியம் நிறைவேறும்.

பரமாத்மாவாகிய சிவம் தான், பாவங் களை நீக்கி, முக்தி அளிக்கும் ஈஸ்வரன் என்று அறிந்து வைத்திருக் கின்றோம். அறிந்தால் மட்டும் போதாது. எப்படி சரீரம் நோய்வாய்ப் பட்டால், மருத்துவரிடம் சென்று மருந்து பெற்றுக் கொண்டு வருகிறோமோ, அதுபோல பரமாத்மாவிடமிருந்தும் அமர் வரதானம் பெற்று வரவேண்டும். அப்போது, சகல விதமான நோய்களும் விலகிப்போகும். அதாவது துக்கம், அசாந்தி, வியாதி மரண பயம் எல்லாம் சதா காலத்திற்கு விலகிப் போய்விடும்.

### *சிவபரமாத்மாவோடு தொடர்பு கொள்வது எப்படி?*

சிவபரமாத்மாவை அடைவது என்பது கால்கள் மூலமாக அல்ல. அவரிடமிருந்து வரம் பெறுவதும் கைகள் மூலமாக அல்ல. சிவபரமாத்மா ஜோதி சொரூபமானவர். சரீர மில்லாதவர். (அசரீரி) ஆதலால் அவரிடம் சொல்வது என்பது சரீரமூலமாக அல்ல. இதற்காக முதலில் தேக அபிமானத்தை விடவேண்டும். அதாவது நான் தேகம் என்பதை மறக்க வேண்டும். நான் ஆத்மா என்று உணர்ந்து உறுதி செய்து கொள்ள வேண்டும். நான் ஒரு ஆத்மா. ஆதலாலேயே பரமாத்மா எனக்கு உறவு முறையாகின்றார். ஆத்மாவாகிய நான், பரமாத்மா தந்தையின் குழந்தை. இந்த சம்மந்தம் மூலமாகவே, ஆத்மாவாகிய நான், என் தந்தைபரமாத்மாவை சந்திக்கின்றேன். இவ்விதத்திலேயே தான் சந்திப்பு சாத்தியமானதாகும். மேலும் நான் ஆத்மா என்ற உணர்வில் நிலைக்க வேண்டும். பரமாத்மா பரந்தாமத்தில் இருக்கின்றார். அவரிடம் சென்றடை வதற்கான சாதனம் மனம். மனம் எனும் கால்கள் மூலமாக (எண்ணம்) அவரிடம் செல்ல வேண்டும். புத்தி எனும் கைகள் மூலமாக அவரிடமிருந்து வரம் பெறவேண்டும். மனதின் மூலமாக நினைவுப் பயணத்தை வெகு துரிதமாகச் செய்ய முடியும். பரமாத்மா தந்தை யார்? எப்படி இருக்கின்றார்? எங்கே இருக்கின்றார்? என்ற ஞானம் கிடைத்ததால், நினைத்த மாத்திரத்திலேயே அவரைச் சென்றடைய முடியும்.

நாம் இப்போது அறிந்து கொண்டிருக் கின்றோம். ஜோதி பிந்து சொரூபமாக விளங்கும் சிவபரமாத்மாவின் இருப்பிடம் பரந்தாமம். இது பிரம்ம லோகம் என்றும் சிவலோகம் என்றும் அழைக்கப்படுகிறது. இது அதிபிரகாசமான ஒளி தத்துவம். இது சூரிய சந்திர நட்சத்திர மண்டலங்களுக்கெல்லாம் அப்பால் உள்ளது. மனதை அவரிடம் மிகவும் அன்புடனும் நம்பிக்கையுடனும் ஒருமுகப்படுத்த வேண்டும். ஆத்மாக்களாகிய நம் எல்லோருடைய இருப்பிடமும் இது தான். இங்கிருந்து தான் பூலோகத்திற்கு வந்தோம். மீண்டும் அங்கு தான் திரும்பிச் செல்லவும் வேண்டும். இவ்வாறாக மனதை அன்புடன் லயிக்கும்போது, அவரிடமிருந்து ஒளியும், சக்தியும் நமக்கு கிடைப்பதை அனுபவம் செய்வோம். இந்த சூட்சுமமான விதி முறையை, இப்போது தான் அவரிடமிருந்து கற்றுக் கொள்கிறோம். இது பற்றி வேறு யாரும் அறிய மாட்டார்கள்.ஆகவே தான் இந்த உலக மக்கள் சிவ பரமாத்மாவிடமிருந்து அடையக் கூடிய அமர் வரதானத்திலிருந்து வஞ்சிக்கப் பட்டிருக்கின்றனர். ஆதலால் இந்த ஆண்டு சிவராத்திரி பண்டிகையை, சிவபரமாத்மாவிடம் சம்மந்தம் வைத்து, அவரிடமிருந்து வரம் பெறுகின்ற பண்டிகையாக கொண்டாடுவோமாக!



# பிரம்மா குமார்-குமாரிகளுக்கான நியமங்களும் மரியாதைகளும்

சகோ. பி.கு. பகவான், சாந்திவன்.

(1) நாம் எவ்வளவு பாக்கிய சாலிகள். சுயம் பகவான் பரந்தாமத்தை விட்டு இந்த சாகார உலகிற்கு வந்து நமது நண்பராகி நம் கூடவே இருக்கின்றார். உலகினர் பகவானை தேடி எங்கெங்கோ சென்று கொண்டிருக்கின்றார்கள். ஆனால் நமக்கோ வீட்டில் அமர்ந்தபடியே பகவான் கிடைத்துள்ளார். பகவான் எப்பொழுதும் நம்முடன் இருக்கும் அனுபவத்தை செய்ய வேண்டுமெனில் அதற்காக அவருடைய வழிப்படி நடப்பது அவசியமாகும். நியமம் மற்றும் மரியாதைப்படி நடக்க வேண்டும். ஆகையால் நாம் யோகத்தில் அமர்ந்து தந்தையை நினைக்க உதவியாக இருப்பது அவருடைய ஸ்ரீமத்தான ஈஸ்வரிய நியமமும் மரியாதையும் ஆகும்.

(2) பள்ளிக்கு செல்லும் மாணவன் கூட தினமும் சரியான நேரத்திற்குச் செல்கின்றான். தேர்ச்சி அடைகின்றான். ஆசிரியரிடம் நல்ல பெயர் வாங்குகின்றான். இப்படி இருக்கும் போது மாணவன் கடைசி தேர்வில் ஏதாவதொரு பாடத்தில் 2 மதிப்பெண் குறைவாக வாங்குகிறார் என்றாலும் கூட ஆசிரியர் அவருடைய நடத்தை மற்றும் ரெகுலாரிட்டியைப் பார்த்து 2 மதிப்பெண்கள் போட்டு தேர்ச்சி பெறச் செய்து விடுவார். அது போலவே நாமும் தினமும் முரளியை கேட்டால், அமிர்த வேளை யோகம் செய்தல், சாப்பிடும் போது தந்தையின் நினைவில் இருந்து சாப்பிடுதல், பேட்ஜ் அணிந்திருத்தல், சார்ட் வைத்தல், தூங்கும் முன் தந்தைக்கு குட் நைட் சொல்லி விட்டு தூங்கச் செல்லுதல் இதையெல்லாம் ரெகுலராக செய்தோமெனில் இறுதி சமயத்தில் ஏதாவது ஒரு விஷயத்தில் பெயில் ஆகி விட்டாலும் கூட தந்தை நம்முடைய நடத்தையைப் பார்த்தும் நம்மை சத்திய உலகிற்கு அனுப்பி விடுவார்.

(3) நாம் எந்தளவு ஒவ்வொரு காரியத்தையும் தந்தையின் நினைவில் இருந்து செய்கிறோமோ அந்த அளவு பாபாவும் நமக்கு உதவியாகவும் இருப்பார், நாம் சரியானபடி முரளியை கேட்கவில்லை, பேட்ஜ் அணியவில்லை, ட்ராபிக் கண்ட்ரோல் செய்யவில்லை எனில் நமது மார்க் ஆனது குறைந்து கொண்டே செல்லும். எனவே நாம் முழு நாளிலும் கவனம் வைத்து காரியங்கள் செய்ய வேண்டும். ஏனெனில் பாபாவிடம் கம்ப்யூட்டர் ஒன்று இருக்கிறது. அதில் நாம் ஸ்ரீமத்படி என்னென்ன காரியம் செய்கிறோமோ அப்போது மார்க் அதிகரித்துக் கொண்டே செல்லும். ஸ்ரீமத்தை விட்டு மன்மத்படி காரியம் செய்து இறுதி சமயத்தில் வெற்றி கை நழுவிப் போக அனுமதித்து விடக்கூடாது. ஒரு வேளை நாம் ஈஸ்வரிய நியமம் மற்றும் மரியாதையின்படி நடக்காத காரணத்தால் தண்டனைக்கு ஆளாக நேரிடலாம். பதவியும் குறைந்து விடும். ஆதலால் மறந்தும் கூட ஸ்ரீமத்திற்கு விரோதமாக எந்த காரியத்தையும் செய்யக்கூடாது.

(4) உதாரணமாக மகாபாரதத்தில் அறியாமையால் செய்த தவறுக்குக் கூட தண்டனை கிடைக்கின்றது என்பதைப்பற்றி கூறப்பட்டுள்ளது. பிஷ்ம பிதாவை அம்பு படுக்கையில் காட்டி இருக்கின்றார்கள். எனக்கு ஏன் இந்த நிலை என்று அங்கு வந்த கிருஷ்ணரிடம் கேட்கின்றார். கிருஷ்ணர் சொல்கின்றார் நீ முன் ஜென்மத்தில் செய்த கர்மத்தின்படி இந்த அம்பு படுக்கை

கிடைத்துள்ளது. நான் ஒன்றும் அதுபோல பாவ கர்மத்தை செய்யவில்லையே என்கிறார் பிஷ்மபிதா, கிருஷ்ணர் மறுபடியும் நீ இன்னும் பின்னால் சென்று பார் என்கிறார். அவரும் ஒவ்வொரு பிறவியாக பார்க்கின்றார். ஒன்றும் தென்படவில்லை. ஆனால் ஒரு ஜென்மத்தில் பிஷ்மர் ராஜாவாக இருக்கின்றார். ஒரு முறை அவர் ரதத்தில் சென்று கொண்டிருக்கும் போது வழியில் ஒரு பாம்பு வருகிறது. அந்த பாம்பு பாதையை கடந்து கொண்டிருக்கிறது. அப்பொழுது பிஷ்மர் இப்போது ரதம் சென்றால் பாம்பு ரதத்தில் மாட்டி இறந்து விடும் என்று நினைத்து ரதத்தை நிறுத்தி விடுகிறார். பிறகு தன்னிடம் இருந்த ஒரு அம்பைக்கொண்டு அந்த பாம்பை எடுத்து பாதை ஓரமாக போட்டு விட்டு பிறகு ரதத்தினை ஓட்டிச் செல்கின்றார். ஆனால் என்னவானது என்றால் அவர் அம்பின் மூலமாக எடுத்து போட்ட பாம்பு அருகில் உள்ள வேலியில் முட்களின் மூது விழுந்து விட்டது. முள் குத்தியதால் பாம்பு இறந்து விட்டது. ஆகையால் தான் அந்த பீஷ்மருக்கு இந்த முள் படுக்கை காட்டப் பட்டுள்ளது. ஆனால் பீஷ்மர் அந்த காரியத்தை தெரிந்து கூட செய்யவில்லை, தெரியாமல் செய்துவிட்டார். எனவே நாம் தெரியாமல் கூட மறந்தும் கூட ஈஸ்வரிய நியமம் மற்றும் மரியாதையை விட்டு விலகி நடக்கக்கூடாது. நாம் கூட மறந்தும் கூட ஈஸ்வரிய நியமம் மற்றும் மரியாதையை விட்டுவிலகி நடக்கக் கூடாது. நாம் கூட சில சமயத்தில் அமிர்த வேளை எழாமல், முரளி வகுப்பு கேட்காமல், நினைவில் தூங்கி, பேட்ஜ் அணியாமல் இருந்து விடுகிறோம். இதனால் நமக்கும் சூட்சுமமான தண்டனைகள் கிடைக்க வாய்ப்புள்ளது.

(5) பாபா நமக்கு கூறியிருக்கின்றார் அல்லவா! நாம் மனதை எங்கு வைக்க வேண்டும். புத்தியை எங்கு வைக்க வேண்டும், மற்றவர்களைப் பார்க்கும்போது எந்த பார்வையில் பார்க்க வேண்டும். எந்தப் பார்வையில் அடிக்கடி சூட்சுமமாக பார்த்துக் கொள்ள வேண்டும் அப்பொழுது நாம் யோகத் தில் அமர்ந்த உடனே நல்ல அனுபவத்தைக் கொடுக்கும்.

(6) இந்த ஞான மார்க்கத்தில் நம்மை நாமே சூட்சுமமாக சோதனை செய்து பார்த்தோ மெனில் கவனத்துடன் நாம் ஞானத்தின்படி செல்லவில்லை என்பது தெரியவரும், நாம் சொல்லலாம் நான் இத்தனை வருடங்களாக ஞானத்தில் இருக்கிறேன் என்று. ஆனால் இப்படியும் அடிக்கடி சொல்கிறோம், யோகம் எனக்கு சரியாகவே வருவதில்லை என்றும் சொல்கிறோம். யோகம் வராததற்கு என்ன காரணம் பாபா கூறியிருக்கிறார் அல்லவா. பிரம்மச்சரியம் பாலனை செய்ய வேண்டும் பிரம்மச்சரியம் என்றால் காம விகாரத்தை மட்டும் வெல்வது அல்ல, சிவபாபா பிரம்மா பாபாவின் மூலமாக என்ன ஈஸ்வரிய நியமம் மரியாதாவினை கொடுத்துள்ளாரோ அதை அனைத்தையும் பின்பற்ற வேண்டும். அப்பொழுது தான் உண்மையான முழுமையான பிரம்மாச்சார்யத்தை கடைபிடிப்பதாக ஆகும். மேலும் பாபா என்னென்ன ஈஸ்வரிய நியமம் மற்றும் மரியாதை கொடுத்திருக்கின்றாரோ அதில் நாம் ஆழமாகச் செல்லும் போது நாம் எப்படி நினைக்கின்றோமோ அப்படி பாபாவின் நினைவில் மிக அருகில் செல்ல முடியும்.

(7) நாம் நியமம் மற்றும் மரியாதையின் படி நடக்கும் போது பாபா நம் கூடவே இருப்பார். சுயம் பகவான் என்னுடன் இருக் கின்றார் என்ற அனுபவம் அதிகம் ஏற்படும். யாருடைய யோகம் குறைவாக இருக்கிறதோ அவர் நியமம் மற்றும் மரியாதையை பின்பற்று வதில் தளர்ச்சியுடன் இருக்கின்றார் என்பதாகும். அப்போது மாயா வருவதற்கு வாய்ப்புள்ளது. எப்படி மழை வருவதற்கு முன் குளிர்காற்று வீசுகிறது. பிறகு சிறுசிறு

மழைத்துளிகள் வருகிறது. அதுபோலவே மாயையும் முதலில் சிறிய சிறிய நியமம் மரியாதைகளை தடை செய்கிறது பிறகு பெரிய சம்ஸ்காரம் அல்லது விகாரத்தின் அடிப் படையில் வருகிறது. உதாரணமாக ஒரு திருடன் ஒரு வீட்டில் திருடுவதற்கு முன் அந்த வீட்டின் பவர் மற்றும் டெலிபோன் இணைப்புகளை துண்டித்துவிட்டு பிறகு திருட ஆரம்கின்றான். அதுபோலவே மாயையும் சிறிய நியமம் மரியாதைகளை கட் செய்கிறது. ஆனால், நீங்கள் நினைக்கலாம் நான் இத்தனை வருடமாக ஞானத்தில் இருக்கிறேன். இப்போது என்னிடம் மாயை ஏன் வருகிறது? ஆனால் இந்த மாயை உங்களிடம் வருகிறது என்றால் நீங்கள் ஏதோ ஒரு நியமம் அல்லது மரியாதையை விட்டு விலகியிருக்கின்றீர்கள் என்பதாகும். மேலும் நாம் அதிகாலை யோகத்தில் அமரும்போது நமக்கு முதல் மாயை சோம்பேறித்தனமாகும். முதலில் இதை நாம் வென்று விட்டோம் எனில் பின்னால் வரும் மாயையின் சேனைகள் சரணடைந்து விடும்.

(8) சதா நாம் இந்த நியமம் மற்றும் மரியாதையின் மீது மிகமிக கவனம் வைக்க வேண்டும். இந்த கவனத்தின் மூலம் தான் பாபாவின் நினைவு மிக சகஜமாக வரும், நாம் அனைவரும் நினைக்கின்றோம் நியமம் மரியாதையினை நல்ல விதத்தில் பின்பற்றி நல்ல அனுபவத்தினை பெற்று நமது பிராமண வாழ்க்கையை நன்றாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கின்றோம். ஆனாலும் சில சமயத்தில் நமது நியமம் மரியாதை தவறி விடுகிறது. இதற்குக் காரணம் என்னவெனில் நாம் சிலசமயத்தில் சமுதாயத் திற்காக பயந்து சில தவறான காரியங்களை செய்து விடுகிறோம் சிலர் நாம் பேட்ஜ் அணிந்திருப்பதைப் பார்த்து கிண்டல் செய்வார் கள். பிறகு இவர் முன்பெல்லாம் இங்கு சாப்பிட்டார் இப்போது சாப்பிடுவதில்லை இவர் முன்பெல்லாம் சினிமா, டி.வி. எல்லாம் பார்த்தார் இப்போது இவைகளைப் பார்ப்பதில்லை. இப்படி அவர்கள் கூறுவார்கள் என்பதற்காக நம்முடைய நியம மரியாதையை விட்டு அதிலி ருந்து விலகி இதையெல்லாம் செய்வதற்கு துவங்குகிறோம். நாம் சமுதாயத்திற்காக பயந்து பாபாவுடைய நியமம் மரியாதையை விட்டு வலகுவதால் நமது யோகமானது சரியாக இருப்பதற்கு வாய்ப்பில்லை, சமுதாயத்தின் படியும் நடக்க வேண்டும், பாபா சொல்படியும் நடக்க வேண்டும் என்று நினைத்தால் இரண்டு பக்கமும் காலை வைத்தால் யோகம் சரியாக வர முடியாது. நாம் ஞானத்தில் பக்காவாக உறுதியாக இருக்க வேண்டும். இல்லையெனில் விட்டுவிட வேண்டும். இன்னும் சொல்லப் போனால் நாம் கிரகஸ்த விவகாரத்தில் இருக்கும்போது சிலர் கூறுவார்கள் ஏன் இப்படி இருக்கிறார்கள் வெளியில் சாப்பிடுவதில்லை, சாப்பாட்டிலும் ஒன்றுமே இருப்பதில்லை, இவர்கள் ஏன் பிறந்தார்கள், எதற்காக இந்த உலகத்தில் வாழ்கிறார்கள் என்று பேசி உங்களை மான அபிமான நிலையில் கொண்டு வருவார்கள். எனவே யார் என்னசொன்னாலும் சரி எப்படிப்பட்ட வார்த்தைகள் உங்கள் காதுகளில் விழுந்தாலும் யாராவது உறவினர் வீட்டிற்கு செல்கிறீர்கள் அவர்கள் ஏதாவது கூறி உங்களை வற்புறுத்தி சாப்பிடச் சொல்வார்கள். நீங்கள் சாப்பிட்டு விடுகிறீர்கள். ஆனால் இறுதி சமயத்தில் தர்மராஜ்புரியில் அந்த உறவினர் வந்து சொல்ல மாட்டார், நான் தான் இவரை சாப்பிடச் சொன்னேன் என்று எனவே அங்கு தர்மராஜாவாக பாபா ஒருவர் தான் இருப்பார். நீங்கள் உங்கள் உறவினரை திருப்தி படுத்து வதற்காக சாப்பிட்டீர்கள். ஆனால் பாபா உங்களிடம் திருப்தி அடையவில்லை அல்லவா? எப்பொழுதும் நீங்கள் ஈஸ்வரிய நியமம் ஈஸ்வரிய மரியாதை இதற்கு உட்பட்டு காரியங்கள் செய்கிறீர்களோ அப்பொழுது பாபா

உங்கள் மீது திருப்தி அடைவார். அப்பொழுது உலகினரும் உங்களிடம் திருப்தியாக இருப்பார்கள். இறுதி சமயத்திலும் நீங்கள் மற்றவர்களை திருப்தி செய்ய முடியும். ஒரு வேளை நீங்கள் மற்றவர்களை திருப்திப் படுத்தினாலும் அவர்கள் உங்களை மான அபிமானத்தில் கொண்டு வருவார்கள் அந்த சமயத்தில் நீங்கள் உணர்ச்சிவசப்படாமல் இருக்க வேண்டும். நாம் பொறுமை சக்தியை கொண்டு வந்தோமெனில் மிக நல்ல உயர்ந்த பதவியை அடையலாம்.

நாம் பிராமண வாழ்க்கையில் எந்தளவு பொறுமை என்கின்ற குணத்தை தாரணை செய்கின்றோமோ அந்தளவு சம்பூர்ண மூர்த்தி ஆகலாம். சாதாரண வாழ்க்கையில் இருந்து கடைசி சமயத்தில் லட்சுமியாகவோ, நாராயணனாகவோ மற்றவர்களுக்கு காட்சி கிடைக்கும். அப்பொழுது அவர்கள் நினைப்பார்கள் இவர் நம் பக்கத்து வீட்டில் சாதாரணமாக இருந்தார், ஆனால் இப்பொழுது இப்படி ஆகிவிட்டாரே என்று வியப்பில் ஆழ்ந்து விடுவர்.

## மூன்றெழுத்து - பி.கு. சகுந்தலா, நாகர்கோவில்

**அன்பு** எனும் மூன்றெழுத்தில் அனைவரின் அன்பைப் பெற்றிடுவோம்
**அமைதி** எனும் மூன்றெழுத்தில் அகிலத்தில் அமைதி நிலை நாட்டிடுவோம்
**ஆத்மா** எனும் மூன்றெழுத்தில் ஆத்ம தர்மம் காத்திடுவோம்

**இனிமை** எனும் மூன்றெழுத்தில் இனிய வார்த்தை பேசிடுவோம்
**ஈதல்** எனும் மூன்றெழுத்தில் ஈசன் அறிமுகம் தந்திடுவோம்
**உனது** எனும் மூன்றெழுத்தில் எனதொன்றுமில்லை என நிமித்தமாகிடுவோம்
**ஊக்க(ம்)** மெனும் மூன்றெழுத்தில் ஆர்வம் உற்சாகத்தில் பறந்திடுவோம்

**எளிமை** எனும் மூன்றெழுத்தில் இயல்பாய் எளிமை கடைப்பிடிப்போம்
**ஏழ்மை** எனும் மூன்றெழுத்தில் ஏழைபங்காளன் குழந்தை என்றிடுவோம்
**ஐயம்** எனும் மூன்றெழுத்தில் ஐயம் ஏதுமில்லை சத்தியமே ஜெயம் ஆகிடுமே

**ஒன்று** எனும் மூன்றெழுத்தில் தந்தை ஒருவரன்றி வேறுயாருமிலர் என்றிடுவோம்
**ஓய்வு** எனும் மூன்றெழுத்தில் ஓசையில்லா உலகில் ஓய்வாக நாம் இருந்திடுவோம்

**தூய்மை** எனும் மூன்றெழுத்தில் தூயவர்கள் ஆகிடுவோம்
**பணிவு** எனும் மூன்றெழுத்தில் பெருந்தன்மையுடன் நடந்திடுவோம்

**குணம்** என்னும் மூன்றெழுத்தில் நற்குணத்தை நாளும் கொண்டிடுவோம்
**பண்பு** எனும் மூன்றெழுத்தில் நற்பண்புகள் நமதாக்கிவிடுவோம்

**சிவம்** எனும் மூன்றெழுத்தில் நித்தம் புதுமை அனுபவம் செய்திடுவோம்
**ஞானம்** எனும் மூன்றெழுத்தில் ஞாலத்தின் ராஜா ஆகிடுவோம்
**யோகம்** எனும் மூன்றெழுத்தில் யோக யோகேஸ்வரர் ஆகிடுவோம்

# நனவாகியது என் கனவு

பி.கு. மங்கையர்கரசி, வேலூர்

**மாசில் வீணையும், மாலை மதியமும் வீசும் தென்றல்....** என்ற பாடலின் பொருளை அனுபவம் செய்து ஆன்மீக சுகத்தில் ஆடிக் கொண்டிருக்கும் என் மனதிற்கு சுகமளித்த சிவபரமாத்மாவுக்கு இக் கட்டுரையை காணிக்கையாக்குகின்றேன். 1989 ஞானம் கிடைத்த வருடம் அன்றைய நாளின் கனவு 2008-ல் நனவாகியது. என்ன அற்புதம்! கற்பனைகளில் வரும் கதைகளில் கேட்ட துண்டு. ஆனால் நிஜவாழ்க்கையில் பரம் பொருளிடம் கொண்ட தூய்மையான அன்புக்கே பரிசாக (காணிக்கையாக) தந்து விட்டார் என நினைக்கும் போது சொர்க்க மென்ன பாபா! இவ்வாழ்க்கை தான் எனக்கு வைரம்! வைரம்! ஆன்மீக சகோதர சகோதரி களே! கனவு என்னவென்று கூறட்டுமா? சுத்தமான அகங்காரமற்ற பெருமையில் கூறுகின்றேன். நான் ஒரு பள்ளி ஆசிரியை என் கணவர் காவல்துறையில் பணிபுரிந்தார். எனக்கு ஞானம் கிடைத்த போது காட்டில் புதையல் கிடைத்தது போன்ற பெருமகிழ்ச்சி ஏனெனில் பக்தியில் அந்த அளவிற்கு தேடிக் கொண்டிருந்தேன். அந்த தேடல் திடீரென கிடைத்ததால் ஏற்பட்ட மகிழ்ச்சி அளவிட முடியாதது. எனது கணவரும் 7 நாள் பாடம் கேட்டார். அவரால் தொடர்ந்து வரமுடியா விட்டாலும் எனது வழியில் எந்த வித தடங்கலும் செய்யவில்லை. இதுவே நான் செய்த பாக்கியம் தான்.

பொதுவாக நான் சம்பளம் வாங்கிய முழு கவரையும் என் கணவரிடம் கொடுத்த பிறகு தான் அவர் தருவதை வாங்கியே செலவு செய்து வந்தேன். இப்போதும் அப்படி தான் கொடுத்தேன். ஆனால் அவராகவே எனது 15000 ரூபாய் சம்பளத்தில் 1500 ரூபாய் பகவானுக்காக, ஆன்மீக செலவிற்காக கொடுத்தார் என்றால் இதுவும் எனது பாக்கியமாக கருதினேன்.

இவ்வளவிற்கும் எனது தந்தை வழியில் எனக்கு ஒரு சிறிய பழைய ஓட்டு வீட்டை ஆஸ்தியாக கொடுத்தார். அவ்வீடு உதவாத நிலையில் வந்து விட்டது. இத்தருணத்தில் என் கணவர் இந்த வீட்டை விற்றுவிடலாம் அல்லது இதை புதியதாக கட்டி வாடகைக்கு விடலாம் என்று கூறிவந்தார். ஆனால் எனக்கோ இந்த சிறிய இடத்தை பகவான் காரியம் நடப்பதற்காக அளிக்க வேண்டும் என்ற ஆவல் இருந்து கொண்டேயிருந்தது. தினமும் பூசலார் நாயனார் போன்று பாபா ரூபம், வகுப்பு நடத்தும் இடம், சகோதரிகள் தங்கும் இடம், விருந்தினர்கள் தங்கும் இடம், சமையலறை என மனதிலே கட்டி வந்தேன். ஆனால் எனது கணவரின் எண்ணமோ வேறாகவே இருந்து வந்தது. அதற்கான முயற்சிலும் ஈடுபட்டுக் கொண்டிருந் தார். ஆனால் நான் தினமும் மனதில் பாபா இந்த இடம் உங்களுக்காகத்தான். இது வேறு எதற்கும் பயன்படக்கூடாது என்று கூறிக் கொண்டேயிருந்தேன். நடப்பது எல்லாம் நன்மைக்கே என்று பாபா கூறுவது போல் என் வாழ்க்கையில் ஒரு துயர நிகழ்வும் ஏற்பட்டது. ஆம் எனது கணவர் ஒரு சாலை விபத்தில் மரணத்தை சந்தித்தார். நான் துக்கப்பட்டாலும் சிறிது காலத்திலேயே என் மனநிலையை சரி செய்து விட்டேன், இது நாடகத்தில் உள்ளது, இதில் ஏதோ நன்மை இருந்தே ஆகவேண்டும் என்று எண்ணினேன். மேலும் என் குழந்தை களும் பாபாவிற்கு வீட்டை கொடுப்பதில் முழுமனதாக ஒப்புகொண்டார்கள் என்றால் இதைவிட பாக்கியம் ஏதாவது உண்டா? எனக்கு ஆனந்தமே ஆனந்தம்.

பிறகு பாபாவிடம் கூறிவிட்டு இந்த வீட்டை புதியதாக கட்ட ஆரம்பித்தேன். கல், மண் விலை கூட எனக்கு தெரியாத வேளை யில் பாபாவிடம் நீங்கள் தான் இதை கட்டித் தரவேண்டும் என்று கூறி செயல்பட்டேன். என்ன அற்புதம் முழு நம்பிக்கையும், நிச்சய புத்தியும் இருந்ததால் பாபாவின் அருளால் ஒரு இஞ்சினியர் மூலமாக கட்டப்பட்டது. முன்பாக பிராமண பரிவாரத்துடன் அகண்ட பட்டி செய்த பின்னர் தொடங்க ஆரம்பித்தோம். இஞ்சினியரிடம் செக் கொடுக்கும் போதெல்லாம் சிவபாபா தான் இதன் தலைவர், இது அவருடைய வீடு என்ற எண்ணத்துடன் தான் கொடுப்பேன். அவரும் அவர் கூட வேலை செய்த அனைவருமே உண்மை யாகவும், நேர்மையாகவும் உழைத்தார்கள். இது கடவுள் எனக்கு கொடுத்த பெரும் பாக்கியம் தானே! திக்கற்ற என்னை தெய்வம் கைவிடவில்லை, கூடவே இருந்து நடத்திக் கொண்டிருந்தார். மேலும் நானும் தினமும் அமிர்த வேளையில் சக்தி அலைகளை பரப்பிக் கொண்டிருந்தேன்.

இத்தருவாயில் மதுவனத்திலிருந்து சகோதர சகோதரிகளும் வேலூரில் பிரபலமாகி யுள்ள பொற்கோவிலை பார்ப்பதற்கு வருகை தந்தார்கள். இவர்களுக்கு பிரம்ம போஜனம் செய்யும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அவர்கள் அனைவரும் வந்து அந்த இடத்திற்கு வந்து சுபமான எண்ண அலை களை அளித்தனர். இவ்வாறு அந்த வீடு நாளொரு மேனியும் பொழுது ஒரு வண்ணமாக வளர்ந்தது. 2008-ல் அந்த வீடு பகவானுக்காக ஒப்படைக்கப்பட்டது. மேலும் வேலூரில் 12 ஜோதிர்லிங்க தரிசனம் நிகழ்ச்சி ஏற்பாடு செய்த வேளையில் சென்னை மாநகரில் இருந்து அனைத்து மூத்த சகோதரிகளும், சகோதரர் களும் மற்றும் பிராமண பரிவாரத்தை சேர்ந்த அநேக சகோதரிகளும், சகோதரர்களும் வந்து சேவையில் ஈடுபட்டு அந்த வீட்டில் தங்கி ஓய்வு எடுத்ததை பார்க்கும் போது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை அளவிட முடியவில்லை. எனது கனவும், ஆசையும் நிறைவேறி விட்டது, மேலும் முழுமையாக பாபா சேவையில் முழ்கி ஆனந்த கடலில் நீந்திக் கொண்டிருக்கிறேன். இதன் மூலம் நான் அனுபவித்தது என்ன வெனில் **பாபாவிடம் உண்மையான அன்பும், நிச்சிய புத்தியும், முழு நம்பிக்கையும் இருக்கும் போது நடக்காத காரியத்தையும் பகவான் எளிதாக செய்து விடுவார் என்பது தான்.**

## ஆத்ம ராகம்


**சரஸ்வதி மேம்பலம், வவுனியா, ஸ்ரீலங்கா**

அகத்தை நோக்கி வினவிட
அமைதி வாழ்வு கிட்டிடும்
புடத்தில் இட்ட பொன்னைப்போல்
புது மெருகு கூடிடும்

ஆத்ம லோகம் சென்றிடும்
ஆவல் கூடி வந்திடும்
சதுர்யுகத்து விளக்கமும்
சங்கமயுகத்தில் தெரிந்திடும்

இழிவு வந்த போதிலும்
ஆத்மா என்றும் தளராது
உடல் அழியாத போதிலும்
ஆத்மா என்றும் அழியாது

விதைக்கும் காலம் இதுவென
விளங்கி நாமும் தியானிப்போம்
சிறந்த வாழ்வு பெற்றிட
சிந்தையில் சிவனைத் தியானிப்போம்



# பரீட்சைக்கால திருப்பிப் பார்த்தலில் இராஜயோக தியானத்தின் பலன்கள்

## (Effects of Meditation on Studies for Examiniation)

பி.கு. சுவாதி

மாணவர்கள் கல்வி கற்கும் காலத்தில் படிப்பதுடன் பரீட்சை என்பதும் முக்கிய பங்கு வகிக்கக் கூடியதாக உள்ளது. ஏனெனில் மாணவர்களின் கல்விக் கற்றுக் கொள்ளும் திறன் மேல் வகுப்பிற்கு செல்வதின் அளவு கோலாக திகழ்வது பரீட்சை தான்.

நிகழ்கால நாகரீக கால கட்டத்தில் போட்டி கள் அதிகரித்துள்ள காரணத்தால் வெற்றி என்பது கடினமாகிவிட்டது. ஆகவே விரும்பும் வகையில் தேர்வுகளில் வெற்றி பெறுவதற்கு தியானமும் மேலும் ஆன்மீகமும் உதவி புரிகின்றது. ஆகவே தேர்வுக் காலங்களில் எவ்வகையில் தியானப்பயிற்சியை மாணவர்கள் பயன்படுத்த வேண்டும்? தியானம் கற்பதில் எந்த விதத்தில் பலன் தருகின்றது? பரீட்சை காலத்தில் திருப்பிப் பார்த்தலில் (Revision) இராஜயோக தியானத்தின் பல்வேறு விளைவு கள் என்ன?

முதலாவதாக தியானப்பயிற்சியானது மாணவர்களின அறிவுத் திறனை (Intelligence quotient) அதிகரிக்கச் செய்கிறது, மேலும் ஞானத்தை அதிகரிப்பதற்கு உதவுகிறது. பகவத் கீதையில் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, மனிதன் தனது கடமையை செய்யும் பொழுது கர்மயோகியாகி காரியம் செய்ய வேண்டுவது அவசியமாகும்.

கடமையை செய்து விட்டு பலனை எதிர் பார்க்காமல் இருக்க வேண்டும். இதன் விளக்கம் யாதெனில் பலனை எதிர்பாரத்து காரியத்தை செய்யக்கூடாது மேலும் ஒருவர் அதற்காக தனது காரியம் செய்வதையே துறந்து விடக்கூடாது என்பதாகும். பிரஜாபிதா பிரம்மா குமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயத்தில் கூறப்படுவதும் இதுவே, கர்மங்களை செய்யும் வேளையில் பரமாத்மாவை நினைவு செய்துக் கொண்டு கர்மயோகியாக செய்ய வேண்டும். கல்வியின் தேவியான சரஸ்வதி கூட ஒரு கையில் ஜபமாலையும் மற்றொரு கையில் புத்தகம் வைத்திருப்பது போல சித்தரிக்கப்பட்டுள்ளது. பலர் இறைவனை நினைவு செய்துக் கொண்டும், அன்றாட கடமையில் கவனம் செலுத்துவது சற்று கடினமானது என நினைக் கிறார்கள். ஒரே நேரத்தில் இரண்டும் செய்வது இயலாத செயல் என்று எண்ணுகின்றனர், ஆனால் இராஜயோகத்தின் வாயிலாக பரமாத்மாவை உணவு உண்ணும் நேரத்தில், சமைக்கும் போதும், நடக்கும் போதும், நினைவு செய்ய முடியும். ஏனென்றால் இவை அனைத்தையும் அனிச்சையாக நமது கை, கால்கள் மூலமாக செய்து விட முடியும். நமது முழு சிந்தனையையும் ஈடுபடுத்த வேண்டியது இருக்காது. ஆனால் படிப்பதில் முழுமையான கவனத்தையும், ஒருமுகப்படுத்துதலும் தேவையாக உள்ளது. ஆகவே இதில் எவ்வாறு தியானப்பயிற்சியை இணைப்பது இது சாத்தியம் தானா? ஆம் பாடத்தை படிக்க ஆரம்பிப்பதற்கு முன்பாக இராஜயோக தியானத்தை சற்று நேரம் பயிற்சி செய்து ஆரம்பிப்பது நல்ல பலன் அளிக்கக்கூடிய தாகும். இந்த முறையானது பாரம்பரிய முறையாக காலை பிரார்த்தனைக்கு பின்பு மாணவர்களுக்கு வகுப்புகள் ஆரம்பிப்பது என்பது இன்றளவும் பின்பற்றப்படுகிறது பள்ளிகளில்.

## பரீட்சைக்கு தன்னை தயார் செய்வதில் இராஜயோக தியானத்தின் விளைவுகள்

மாணவர்கள் தன்னுடைய வீட்டில், வகுப்பறையில் அல்லது நூலகத்தில் அமர்ந்து பரீட்சைக்கு தயார் செய்தாலும் சரி சிறிது நேரம் தியானம் செய்வதற்கு முக்கியத்துவம் தர வேண்டும்.

**1. ஒருமுகப்படுத்துதல்:** பரீட்சைக்கு தயார் செய்வதில் இராஜயோக தியானம் பெருமளவில் ஒருமுகப்படுத்துதலில் உதவுகிறது. கீழே தரப்பட்டுள்ள அட்டவணைப்படி முயற்சி செய்து பார்க்கலாம்.

### படிப்பதற்கான கால அளவு மற்றும் தியானம் செய்ய வேண்டிய நேரம்

| | |
|---|---|
| 02 மணி நேரம் | 8-10 நிமிடங்கள் |
| 03 மணி நேரம் | 12-15 நிமிடங்கள் |
| 04 மணி நேரம் | 18-20 நிமிடங்கள் |
| 05 மணி நேரம் | 22-25 நிமிடங்கள் |

படிக்கும் கால அளவுக்கு ஏற்றவாறு தியானம் செய்யப்படும் நேரம் குறிப்பிடப் பட்டது. இதனை சுய அனுபவத்தின் வாயிலாக செய்து பார்ப்போம் எனில் புரிந்து கொள்ள முடியும் தியானம் செய்து முடித்த பின்பு மனம் மிகவும் அமைதியாகவும், குளிர்ச்சியாகவும் இருக்கிறது, இது அதிகளவான ஒருமுகப்படுத் தலை உணர்த்துகிறது.

### 2. கடினமான சூழ்நிலையை புரிந்துக் கொள்ளுதல்:

தியானப்பயிற்சியினால் மனதினை பரமாத்மா தந்தையுடன் இணைக்கும் போது பல்வேறு மன உபாதைகள் மற்றும் தொந்தர வுகளை எளிதாக ஆக்கிக் கொள்வதுடன், மனம் அமைதியும் அடைந்து விடுகிறது. தியான நேரத்தில் சர்வ சக்திவானின் துணை யினால் மனம் வலிமை அடைகிறது. ஆகவே அமைதியான மேலும் சக்திவாய்ந்த மனமானது எளிதாக கடினமான சூழ்நிலையையும் கூட கையாளுவதில் திறன் உடையதாக இருப்பதுடன் பிரச்சனைகளை எளிதாகவும், விரைவாகவும் முடிப்பதிலும் விலிமை தருகின்றது.

### 3. கோபத்தினை எதிர்கொள்ளுதல்:

சில நேரங்களில் வெளிப்புற சூழ்நிலை களினால் மனம் விரைவாக கோபப்படுதல், அமைதியில்லாத தன்மை மற்றும் எதிர்மறை யாக செயல்படுதல் போன்றவை நடக்கிறது. சக நண்பர்கள் சண்டையிடுதல் மேலும் சில நேரங்களில் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் களின் கடுமையான நடவடிக்கை யினால் பாதிப்பிற்குள்ளாகிறார்கள். இவை அனைத்தும் கூட படிப்பில் கவனம் செலுத்துவதில் தடை யாக உள்ளது. இப்படிப் பட்ட சூழ்நிலையில் ஒரு மாணவன் தியானத்தில் அமர்ந்து பரமாத்மாவுடன் தொடர்பு வைத்து தனது அனைத்து சுமைகளையும், நிகழ்ந்த சம்பவங்களை உண்மையான மனதுடன் பகிர்ந்து கொள்ளும் போது மனம் லேசாகுவ துடன் படிப்பதற்கும் தயாராகி விடுகிறது.

### 4. மகிழ்ச்சி:

படிப்பை தொடங்குவதற்கு முன்பு தியானம் செய்வது மட்டுமல்லாது, படித்து முடித்த பின்பு தியானம் செய்வதால் மகிழ்ச்சி அளிக்கும், ஏனென்றால் படித்தவற்றை மேலும் கடினமானவற்றை நினைவு கூர்வதற்கு அமைதியான மேலும் ஆற்றல் வாய்ந்த மனநிலை தேவைப்படுகிறது. இத்தகைய அணுகு முறை படிப்பதில் ஆர்வத்தை தூண்டு வதுடன் வெற்றியையும் தேடித்தருகின்றன.

### 5. படிப்பதில் இடைவேளை:

பொதுவாகவே தொடர்ச்சியாக 3-4 மணி

நேரம் படித்த பின்பு மனம் சோர்வு அடைந்து ஓய்வு பெற விரும்புகிறது. சற்று இடைவெளி தேவைப்படும். மனதினை புத்துணர்ச்சி படுத்திக் கொள்ள இப்படிப்பட்ட வேளையில் அரை மணி நேரம் ஓய்வாக அமர்ந்து தியானம் செய்தல் அளவற்ற புத்துணர்ச்சியை ஏற்படுத்துவதுடன், தொடர்ந்து படிப்பதற்கு தயாராகியும் விடுகிறது.

### 6. நேரத்தை மிச்சப்படுத்துதல்:

படிப்பினை தொடங்குவதற்கு முன்பு தியானம் செய்தல் புரிந்துக் கொள்ளுதலை விரைவு படுத்துவதுடன் படிப்பவற்றை வேக மாகவும் கிரகிக்க வைக்கின்றது. நேரத்தை மிச்சப்படுத்துவதுடன் ஆற்றலையும் அதிகப் படுத்துகிறது. இது போட்டிகள் நிறைந்த இக்கால கட்டத்தில் மிகவும் அவசிமான ஒன்றாகும்.

### அறிவுத் திறனை அதிகரிப்பதில் தியானத்தின் பங்கு:

மேற்கண்ட அனைத்தும் அறிவுத் திறனை (Intelligent) வளர்ப்பதிலும், அதிக அளவான மதிப்பெண்களின் சதவீதத்தை பெறச் செய்கிறது. இராஜயோக தியானமானது இவ்வாறாக பயனுடையதாக இருக்கிறது தேர்வு நேரத்தில் மாணவர்கள் தன்னை தயார் செய்துக் கொள்வதில் இது மன ஒருமுகப்பாட்டை அதிகரிக்கச் செய்கிறது, அதனுடன் ஆற்றலையும் படிப்பில் ஆர்வத்தை தூண்டு வதால் மகிழ்ச்சியும் மன அமைதியையும் பெறச் செய்கிறது.

தேர்வு காலம் நெருங்கி வரும் தற்சமய நேரத்தில் மாணவர்கள் தங்களுக்கு அருகில் உள்ள பிரஜாபிதா பிரம்மா குமாரிகள் இராஜயோக தியான நிலையத்தில் சென்று தியானப்பயிற்சியை பெற்று பயன் பெறலாம்.

---

சங்கமயுகம், டிசம்பர் 2010 - ஜனவரி 2011 - இதழ்: 5 பிழை திருத்தம்
தவறுக்கு வருந்துகிறோம்.

**பக்கம்: 01** **தலையங்கம்: ஆதி தேவ் பிரம்மா**

**பக்கம்: 04** சம்பூரணமாக வேண்டும், சம்பூரணமாவது எப்படி? இதை நினைவூட்டுவதுதான் ஜனவரி-18

**பக்கம் 08** இப்போது இதையும் சொல்லியாக வேண்டும். கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக சிலரிடம் மாறுபட்ட கருத்துக்கள் உண்டு என்பதை நான் அறிவேன். அது என்ன? மனிதன் கடவுளைப் பார்க்க முடியாது. கேட்கவும் முடியாது. என்ற நம்பிக்கையுடையவர்கள் இவர்கள். மேலும் கடவுளின் அவதார தரிசனத்தை மனிதனால் தாங்கிக் கொள்ளவும் முடியாது என்பதாக இருக்கிறது.

**பக்கம் 10** உண்மையை உணரும் விதத்தில் **பழையதை எரித்தல், புதியதை புகுத்தல், நன்றியோடு இறைவனை நினைத்தல்** என்ற மூன்று ஆன்மீக இரகசியங்களைப் புரிந்து, இந்த ஆண்டு பொங்கல் திருநாளை ஆத்மாவும், உடலும் வளம் பெறக் கொண்டாடி மகிழ்வோமாக!

**பக்கம் 11** **சிறு கதை - பேராசை பெரு நஷ்டம்**


**பக்கம் 23** **மறுபிறவி**

**பக்கம் 24** **தாதா லேக்ராஜ் பிதா ஸ்ரீ பிரம்மா ஆனார்**

**பக்கம் 29** **மனமும் பணமும் உணவு எப்படிப்பட்டதோ, அப்படியே மனம்**" என்று சொல்வதுண்டு. இந்த பழமொழி பணத்திற்கும் பொருந்தும். "பணம் எப்படியோ, அப்படியே மனம்' என்றும் சொல்லலாம்.

## நமது கேள்விகள் - தாதிஜியின் பதில்

**தமிழாக்கம் - ஞானாமிருதம், பிப்ரவரி 2011**



**கேள்வி : பகவான் வாக்கு. பிராமணர் களிலும் கூட அதாவது யாருக்கு பகவான் பற்றிய ஞானமுள்ளதோ, இவர்களிலும் கூட மிகவும் கொஞ்சம் பேர் தான் பகவான் யார்? எப்படி இருக்கிறார்? என்பதை அறிந்தவர்களாயிருக்கிறார்கள். தாதிஜி இதன் உட்பொருள் யாது ?**

**பதில் :** முதலில் புத்தி மூலமாக அறிய வேண்டும். பிறகு இதனை இதய பூர்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இதன் பிறகு புரிந்து கொண்டது எவ்வளவோ அவ்வளவு பிராப்தி. அநேகர் பகவான் ஒருவர் என்று அறிந்து கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக இவர்கள் குழப்பத்திலிருந்து விடுபட்டு விட்டார்கள். ஆதலால் முரளி மீது அன்பிருக்கிறது. ஞானம் விருப்பமுள்ளதாக இருக்கிறது. வாழ்க்கை தூய்மையுள்ளதாக இருக்கிறது. மனதில் அமைதி குடிக் கொண்டி ருக்கிறது. ஆனால் பாபா கூறுகின்றார். நான் யார்? எப்படியிருக்கின்றேன் என்ற இந்த அறிமுகத்தில் மூன்று தந்தையைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. நாம் கூறுகின்றோம். லௌகீகம் முழுமையாகவே முடிந்து போய் விட்டது. இப்போது சாகார், அவ்யக்தம் மற்றும் நிராகார் என்ற மூன்றைப் பற்றி புரிந்து கொள்ள வேண்டும். பிரம்மா பாபாவை, என்னுடைய பாபா என்று உள்ளம் மட்டுமே ஏற்றுக் கொள்ளவில்லை, கர்மத்திலும் கூட நான் என்ன கூறவிரும்புகிறேன் என்றால், என்னுடைய பாபா என்ன செய்கின்றாரோ அதை நான் செய்ய வேண்டும். உதாரணமாக பிரதம மந்திரியின் செயலாளராக இருப்பவர்க்கு நான் இன்னார் என்ற நஷாஇருக்கிறது. இதுபோல பிரதம மந்திரிக்கு பாதுகாப்பாளராக நியமிக்கப்பட்டிருப்பவர்கள் குறைந்த பட்சம் தேர்வு செய்யப்பட்டவர்களாக இருப்பார்களே தவிர, பெயரளவில் யாரை வேண்டுமானாலும் சேர்த்துக்கொள்ளமாட்டார்கள் அல்லவா ! இதை விடவும், பகவானுக்கும் கூட இவர் எனக்கு மிகவும் நெருக்கமுள்ள குழந்தை என்ற எண்ணம் உண்டாகும்படியாக இருக்க வேண்டு மல்லவா? பாபா கூறுகின்றார் : சூட்சும வதனம் உனக்காகத்தான் என்று. அப்படி யானால் என்னுடைய பாபா அங்கிருக்கின்றார் என்ற உளம் கனிந்த உணர்வு மேலிடுகிறதா? அங்கிருந்து அன்பின் சக்தியைப் பெற வேண்டும். சூட்சுமமான சைகைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். பாபாவைப் புரிந்து கொண்டவர்கள் மட்டுமே சைகையைப் புரிந்து கொள்வார்கள்.

**2. கேள்வி : தற்சமயம் எத்தகைய சேவை நடக்கிறதோ, இதில் பிராமணர்களாக மிகச் சிலரே உருவாகிறார்கள். ஆனால் நேரமும், பொருட் செலவும் அதிகமாகவே இருக்கிறது. இதன் பின்னணியில் என்ன இரகசியம் உள்ளது?**

**பதில் :** லண்டனில் முதன் முதலாக ஒலிம்பியாவில் கண்காட்சி நடத்தப்பட்டது. பாரதத்தைவிட பத்து மடங்கு செலவும் அங்கு அதிகம். ஆனால் எல்லோருக்கும் செய்தி கொடுப்பது நமது கடமை. சேவை செய்வது என்பது நமது வித்யாலயத்தின் கௌரவம். பொது ஜனங்கள் கூறுகின்றார்கள். பிரம்மா குமாரிகள் எந்த ஒரு சேவை செய்தாலும் உள்ள பூர்வமாகச் செய்கிறார்கள். ஒவ்வொரு

அமைப்புக்கும் ஒரு செகரட்டிரி அவசியம் நியமிக்கப்பட வேண்டும். சம்பளமும் கொடுக்க வேண்டும். பிறர் என்ன நினைக்கிறார்கள், பிரம்மா குமாரிகளுக்கு பணம் எங்கிருந்து வருகிறது? சேவை செய்வதற்கான சேவாதாரிகள் எங்கிருந்து வருகிறார்கள் என்று வியப்படைகிறார்கள். இங்கு சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. எல்லோருக்கும் செய்தி கிடைக்க வேண்டும் என்று உள்ளம் விரும்புகிறது. பாபா சைகையாகக் கூறினார். வாரிசு மற்றும் மைக் உருவாக்க வேண்டும் என்று. ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான பிராமணர்களை தயார் செய்வது ஒன்றும் பெரிய விஷயமல்ல. முதலில் பிராமணர்களை தயார் செய்வதும் கஷ்டமானதாகத்தானிருந்தது, தற்சமயம், ஓரிருவரைப் பார்த்து பயிர் வளர்ந்து விடுகிறது. என்றாலும் வாரிசு உருவாக வேண்டும். ஒரு சிலராவது மைக் உருவாக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். இதற்காக சேவை பெரிய அளவில் செய்கிறோம். வெவ்வேறு துறையைச் சார்ந்த பிரமுகர்களையும் சந்திக்கிறோம். சேவை செய்கிறோம். வருகை தரும் ஐ.பி. மற்றும் வி.ஐ.பி.க்கள் என்ன கூறுகின்றார்கள். நல்ல காரியம் செய்கிறீர்கள் என்று. ஆனால் பாபா! நீங்கள் தான் எல்லாமே. தங்களுடைய ஞானம் தான் உண்மையானது என்ற ஓசை உள்ளத்திலிருந்து வெளிவர வேண்டும். இதில் நேரம் ஆகிக் கொண்டேயிருக்கிறது. என்னவெல்லாம் சேவை நடந்ததோ, அதில் உள்ள பாபாவின் இரகசியம் இது தான். நேரம் துரிதகதியில் ஓடிக் கொண்டிருக்கிறது. விநாச காலத்திற்கு முன்பே எல்லோருக்கும் செய்தி கட்டாயமாகக் கிடைத்துவிடவேண்டும்.

**கேள்வி: சம்பன்னமாக சம்பூரணமாக ஆவதற்கு எப்படிப்பட்ட புருஷார்த்தம் செய்ய வேண்டும்?**

**பதில்:** செகண்டில் புல் ஸ்டாப் (ஒரு வினாடிக்குள் முற்றுப்புள்ளி வைத்தல்) செகண்டில் முக்தி பிறகு ஜீவன் முக்தி, மனம் சாந்தமாக, கர்மேந்திரியங்கள் சீதளமாக இருக்கிறதா என்று மனப்பூர்வமாகப் பாருங்கள். பாபா எதிரில் இருக்கின்றார். இவ்வாறு பயிற்சி செய்து கொண்டேயிருக்க வேண்டும். எந்த எண்ணத்திற்கு அவசியமில்லையோ அது மனதில் உற்பத்தியாகக் கூடாது. ஒருக்கால் வந்தாலும், ஒரு வினாடியில் சாந்தமாகிவிட வேண்டும். அப்பாவியாகி விடக்கூடாது. சிந்தனையாளராகி, ஒரு வினாடியில் தன்னை விடுவிக்க வேண்டும். பார்க்க வேண்டும், ஆத்மா விடுவிக்கப்பட்டு விட்டதா? கடந்து போன விஷயம் நடக்கப்போகிற விஷயம் பற்றிய சிந்தனையின்றி ஆத்மா சாந்தியின் அனுபவத்தில் இருக்க வேண்டும். உள்ளம் மகிழ்ச்சியோடிருக்க வேண்டும். சர்வ சக்திகளும் நல்லமுறையில் ஒத்துழைப்புத் தர வேண்டும். எந்த சமயத்தில், எந்த சக்தியின் அவசியம் இருக்கிறதோ, அந்த சக்தி உதவிக்கு வரவேண்டும். மேலும் இந்த சக்தி உதவி அளிக்கவில்லை என்ற புகார் சொல்லக்கூடாது. இது கௌரவத்திற்குரியதல்ல. கௌரவம் எதுவென்றால், லக்ஷியம் எதிரில் இருக்க வேண்டும், அதை அடைய வேண்டும். பாபா கூறுகின்றார். கை கோர்த்துக் கொண்ட பிறகு வாருங்கள். இப்படிப்பட்ட கவனம் லக்ஷியத்தை எட்டிப்பிடிக்கும் வரை இருக்க வேண்டும். இது எனது கௌரவம். மிக நெருக்கமாகவும், அன்பாகவும், தன்னில் சமாதானத்துடன் எல்லோரிடமும் சமாதானத்துடன் இருந்தால் அது தான் உண்மையான மனம். உண்மையான மனதுடையவர்களிடம் பாபாவும் ராசியாக இருப்பார். எல்லாமே ஒரு நிமிட விஷயம். தனக்குத் தானே மனம் நன்றாகவே இருக்கிறது என்று தேற்றிக் கொள்ளும் விஷயமல்ல. உங்களுக்குள்ளேயே கேளுங்கள், யாரிடமும் கோபம் இல்லை தானே! இப்படிப்பட்ட சுவமான் ஸ்திதியில் எல்லோருக்கும் மரியாதை

கொடுக்க வேண்டும். பாபா எவ்வளவோ புத்தி சொல்லியிருக்கிறார்.அதேபோலவே நடக்க வேண்டும் என்று பாபா எதிர்பார்க்கின்றார். எப்போது உலகத்திற்கு ஆதார மூர்த்தியாக இருக்கிறீர்களோ, அப்போது வேறு யாருடைய ஆதாரமும் வேண்டாம். பேச்சு மற்றும் ஸ்திதி சமமாக இருக்க வேண்டும்.

**கேள்வி: ரைட் ஹேண்ட், லெப்ட் ஹேண்ட் என்று யாரைக் கூறலாம்?**

பதில்: எப்போதாவது கொஞ்சம் யோசிப்பவராயிருந்தால், லெப்ட் ஹேண்டில் போய்விட்டார். சேவை பாரமாக இருப்பதாக நினைத்தால் லெப்ட் ஹேண்டில் போய் விட்டார். இந்த வேலை, அந்த வேலை, எத்தனை வேலையை நான் செய்ய வேண்டும் என்று நினைத்தால் லெப்ட் ஹேண்டில் போய் விட்டார். எண்ணத்தில் சிறிதளவு தூய்மையில் குறை இருக்குமானால் லெப்ட் ஹேண்டில் போய்விட்டார். ஒருமுறை பாபா அமர்ந்து கொண்டிருந்தார். அப்போது கூறினார், எனக்கு இப்போது ரைட் ஹேண்ட் யாருமில்லை குழந்தாய் என்றார். அப்போது எனக்குள் ஒரு எண்ணம் வந்தது, பகவானுக்கு என்ன வேண்டும்? பாபா சேவைக்காக பிரேரணை களைக் கொடுத்தார். எங்களுக்காக அறிவுரை களையும் வழங்கிக் கொண்டிருந்தார். பாபா கூறிய அறிவுரைகளை யார் தாரணையில் கொண்டு வருகிறார்களோ, அதன் மூலமாக தானாகவே அறிவுரைகள் காரியங்களைச் செய்விக்கும். ரைட் ஹேண்டாக இருப்பவர் களின் எண்ணத்தில் தூய்மை இருக்கும். எப்படி மந்திரவாதிகளின் கை சுத்தமாக இருக்கிறதோ, அப்படி. வள்ளல், தான் தானம் செய்ய வேண்டும் என்பதைப்பற்றி யோசிப்பது இல்லை. தனக்கு என்ன கிடைத்ததோ, அது எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்று மனம் தானாகவே விரும்பும். ஒரு நாள் இரவு நேரத்தின் போது ஒரு சகோதரர் கூறினார். உலகினர் என்ன சொல்கிறார்கள் என்றால் இவரிடம் என்னவெல்லாம் இருக்கிறதோ, அது தனக்கும் கிடைக்க வேண்டும். ஆனால் பகவானுடைய குழந்தைகள் என்ன நினைப்பார் கள், எது தன்னிடம் உள்ளதோ அது எல்லோரிடமும் இருக்க வேண்டும். எத்தனை வேறுபாடு? செய்விப்பவர் செய்வித்துக் கொண்டிருக்கிறார். எல்லோரும் இதேமாதிரி யான மன நிலையில் இருக்க வேண்டும் என்று மனம் விரும்புகிறது. ஆர்வம், உற்சாகம் சதா இருக்கிறது. நான் செய்யவில்லை யென்றால் வேறு யார் செய்வார்? ஆம் அப்படியே செய்கிறேன் என்று சொல்லக்கூடிய வர்கள் எதிரில் பகவானும் ஆஜராகி விடுகிறார்.

**கேள்வி: சேவையின் மீது அதிக அன்பு யாருக்கு இருக்கும்?**

பதில்: யார் உள் மனதின் மூலம் ஸ்திதியின் மீது கவனம் வைத்திருக்கின்றாரோ அவருக்கு சேவை மீது அதிக அன்பு இருக்கும். ஏனென்றால் சேவை அநேக வித மானதாக இருக்கிறது. மேலும் அனைத்திலும் சிரேஷ்டமான சேவை மனசா சேவை ஆகும். மனசா சேவை கர்ம சம்மந்தத்தில் தெரிந்து விடும். மறைந்திருக் காது. ஏதோ ஒரு மூலை யில் அமர்ந்து கொண்டு நாம் பாபாவை நினைவு செய்ய முடியாது. ஆனால் நினைவில் இருந்து கொண்டு எங்கு வேண்டுமானாலும் அமர்ந்திருக்கலாம். அதில் சேவை அடங்கி யிருக்கும். நாளுக்கு நாள் நடத்தை மற்றும் முகத்தின் மூலம் சேவை சகஜமாகவும், இயல்பானதாகவும் தெரிகிறது. உள்ளேயிருக்கும் தாரணை என்னும் மனக் கண்ணாடி சுத்தமாக இருந்தால் புத்தியானது அநாவசிய விஷயங்களில் செல்லாது. இப்படியும் கூற மாட்டார். அதாவது இப்போது விஷயங்களில் செல்லாது. என்றும் கூற மாட்டார். அதாவது இப்போது என்ன நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. என்னுடைய எண்ணமும் இப்படித்

தானிருந்தது என்றும் கூறமாட்டார். சூட்சுமத்திலும் எந்த ஒரு எண்ணமாக இருந்தாலும், அவசியமில்லாத எண்ணமாக இருந்தால் அதை அனுமதிக்க மாட்டார். என்ன நடந்து கொண்டிருக்கிறதோ, அதில் கவனம் இருக்க வேண்டும். எது முடிந்து விட்டதோ அதை மனதில் நினைவுக்குக் கொண்டு வரவேண்டிய அவசியம் இல்லை. யார் என்ன செய்து கொண்டிருந்தாலும், அதைப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. ஒரு காரியத்தை ஒருவர் செய்து கொண்டிருக்கிறார், நீங்கள் அவரிடம் பேசிக் கொண்டேயிருந்தால், அவர் குழப்பமடைந்து விடுவார். அவரைச் செய்ய விட்டு விடுங்கள். அவர் நன்றாகவே செய்வார். யாராவது தவறு செய்துவிட்டால் அதை பத்து பேரிடம் சொல்வார்கள். ஆனால் இந்த விஷயத்தில் எச்சரிக்கை அவசியம். தன்னுடைய எண்ணங்களை தூய்மையாக வைத்துக் கொள்வதற்கு நிறைய சூட்சுமமான சோதனைகள் இருக்கின்றன. இதன் மூலமாகவே விலகியிருக்க முடியும்.

## சகல சக்திகளையும் விட சிறந்தது எது?

**ஹடயோகி மகேஷ் ஆனந்தன் என்பவர் தனது சித்து வித்தைகளால் மன்னர், மக்கள் அனைவரையுமே பிரமிக்க வைத்தான். ஆச்சரியப்பட்டு அனைவருமே வியந்தனர், புகழ்ந்தனர். இதனால் அவனுக்கு அகங்காரமும் அதிகமாகியது. அவன் ஒரு நாள் தெய்வீக குணங்கள் நிறைந்த மகானிடம் சென்று தனக்கு பூமியின் கீழ் அதிக நாட்கள் இருக்க முடியும் என்றும், ஆகாயத்தில் பறக்க முடியும் என்றும், தண்ணீரில் நடக்க முடியும் என்றும் அகங்காரமாக கூறினான்.**

**அமைதியாக கேட்ட மகான் மகனே! பறவைகள் ஆகாயத்தில் பறக்கின்றன, புழுக்கள் பூமியின் கீழ் அதிக நாட்கள் இருக்கின்றன, மீன்கள் தண்ணீரிலேயே வாழ்கின்றன. இம்மாதிரியான தாழ்ந்த ஜந்துக்களைப்போல் இருப்பதால் என்ன பயன்?**

**நீ கடவுளைப்போல் அன்பு, இரக்கம், பணிவு, பொறுமை, அமைதி .... போன்ற நற்குணங்களை கொண்டு வந்து அதை வளர்த்துக்கொள்! நடந்துகொள்! இதைவிட சக்தி நிறைந்த செயல் எதுவும் கிடையாது. இதற்காக முயற்சி செய் என்று மிகவும் அன்புடனும், அமைதியாகவும், இனிமையாகவும் கூறினார். இதைக் கடை பிடிப்பவர்கள் அனைவருமே சக்திசாலிகள் தான்.**

## பகவானுக்கு அர்ப்பணம் செய்த பக்தர்கள்

பி.கு. ஆதிலட்சுமி, இரத்தன் பஜார், சென்னை

**சூடிக் கொடுத்தாள் ஆண்டாள் — கடித்துக் கொடுத்தாள் சபரி**

**அவலைக் கொடுத்தார் குசேலர் — மீனைக் கொடுத்தார் குகன்**

**கண்ணைக் கொடுத்தார் கண்ணப்பர் — எலும்பைக் கொடுத்தார் தத்தாதிரேயர்**

**மனதைக் கொடுத்தார் பூசல நாயனார் — பிரம்படி கொடுத்தார் பாண்டியர்**

**கல்லால் அடித்தார் சாக்கிய நாயனார் — தன்னையே கொடுத்தார் பிரஜாபிதா பிரம்மா**

## HAPPY VILLAGE RETREAT CENTRE , CHENNAI
## PROGRAMS CONDUCTED AFTER INAUGURATION
## 25TH JANUARY 2010 – JAN' 2011

| Sl.No. Program's name | Bk / Guest participants | | No.of days |
|---|---|---|---|
| 1. Zonal meeting | bk | 500 | 4days |
| 2. Surrender brother's creative bhatti | bk | 45 | 1day |
| 3. Bk youth prog | bk | 500 | 3days |
| 4. Zonal bhatti | Other kumars | 550 | 3days |
| 5. Zonal bhatti | Mata's &kanyas | 500 | 3days |
| 6. Zonal bhatti | Kumars&mata's | 600 | 3days |
| 7.Chengalpet center bhatti | bk | 55 | 2days |
| 8. Jayanti bhen prog | Surrender bro's & sister's & Students BK | 1500 | 1day |
| 9. Surrender teacher's bhatti | 21yrs. & above from zone | 25 | 3days |
| 10. Surrender teacher's bhatti | 10 to 20 years | 50 | 3days |
| 11. Surrender teacher's | 2 to 10 years | 60 | 3days |
| 12. Surrender brother's bhatti | | 70 | 3days |
| 13. 18th Jananury 2011 | | 800 | 1day |
| 14. Education wing training for bk's | | 100 | 3days |

| | | |
|---|---|---|
| **Total Number of Prog. Conducted for B.ks** | = | **14** |
| **Total Number of Prog. Conducted for non bks** | = | **23** |
| **Total Number of Prog. Conducted** | + | **37** |
| **Number of people participated B.Ks** | = | **5,355** |
| **Number of people participated Non B.Ks** | = | **26,187** |
| **Total number of people participated** | | **31,542** |

ஆசிரியரும் பிரசுரிப்பவரும் பி.கு. அண்ணபூர்ணா, பிரஜாபிதா பிரம்மாகுமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம், சாந்திதாமம், பிளாட் எண்: 3702, Q-96, 3வது அவின்யு, அண்ணாநகர், சென்னை-40 அச்சிட்டோர் தா. தியாகேசன், தங்கேஷ் பிரிண்டர்ஸ், சென்னை- 5 R.No.49463/87






**சென்னை (அண்ணாநகர்):** பிரம்மாகுமாரி Dr. கலா அவர்கள் (நியுயார்க்) சென்னை நகர பிரமுகர்களுடன் கலந்துரையாடல் உடன் பிகு. கலாவதிஜி மற்றும் பங்கு கொண்டோர்





சென்னை: Police Training College-ல் Sub-Inspectorsக்கு - மனவள சிறப்பு பயிற்சி, பிரம்மாகுமாரி Dr. கலாஜி அவர்களால் அளிக்கப்பட்டது. மேடையில் உடன் திரு. சேகர், IPS, திரு. அம்ரிஷ் பூஜாரி IPS, திருமதி ஜெயா கௌரி, IPS பிகு. ஜான்சிராணி





**சென்னை:** சைதாப்பேட்டை சென்டர் புதிய இடத்திற்கு மாற்றப்பட்ட நிகழ்ச்சியினை மூத்த சகோதரிகள் மற்றும் சகோதரர்கள் மூலமாக கேக் வெட்டி கொண்டாடப்பட்டது

**சென்னை (அடையார்):** காவல் துறையை சேர்ந்த உயர் அதிகாரிகளுக்கு இராஜயோக பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியில் கலந்து கொண்டவர்களுடன் பிகு. முத்துமணி மற்றும் பிகு. சகோதரிகள், சகோதரர்கள்